745

# பைந்தமிழ்

மதி - 4

ட

JL
031m 211, N2 3PY
N23.1.4.
144022

கடவுள் துணை.

# "பைந்தமிழ்"

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு—திருக்குறள்.


| | | |
|---|---|---|
| தாகுதி 1 | உருத்ரோத்காரி௵ சித்திரை௴<br>1923௵ ஏப்ரல்௴ | பகுதி 4 |


## கடவுள் வணக்கம்.

### விநாயகர்.

" சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே."

### ஆறுமுக நாயனார்.

" ஆறுமணி மவுலியுங்கண் ணீராறுங் குழைகளீ ராறும் பால
மாறுநற் பவளவா யாறுமா றுவெழுத் தாறுமானே
றுமிளிர் துண்டமுந்தோ ளீராறுங் கரங்களீ ராறுஞ்சோதி
யாறுவத னமுந்தொழுவோ ராறுத பிறவியினைப் பாறுவாரே.

1. வாசாக யிங்கரிய மன்றியொரு சாதனை
 மனோவாயு நிற்கும் வண்ணம்
வாலாயமாகவும் பழகியறி யேன்றுறவு
 மார்க்கத்தி னிச்சை போல
நேசானு சாரியாய் விவகரிப் பேனந்த
 நினைவையு மறந்த போது
நித்திரைகொள் வேன்றேக நீங்குமெனை வெண்ணிலோ
 நெஞ்சந் துடித்த யருவேன்

நூலகம் ★



பேசாத வானந்த நிட்டைக்கு மறிவிலாப்
பேதைக்கும் வெகுதூரமே
பேய்க்குண மறிந்திந்த நாய்க்குமொரு வழிபெரிய
பேரின்ப நிட்டை யருள்வாய்
பாசாட விக்குளே செல்லாத வர்க்கருள்
பழுத்தொழுகு தேவ தருவே
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

---

மின்வாசி கொண்டசடை யிறைவனே போற்றிசதுர் வேத மாக
முன்வாசி கொண்டவனே கனலெரிய நின்றாடு முதல்வா போற்றி
தென்வாசி கொண்டபுரந் திரியநகைத் தருள்பரம சிவனே போற்றி
பொன்வாசி கொண்டவனே வெள்ளிமலை யுடையானே
போற்றி போற்றி

---

# தமிழ்ப்பத்திரிகை.

## தெய்வத்தமிழின் செல்வமக்காள்!

நமது "பைந்தமிழ்" வெளியுலாவும் நான்காம் மாதம் வந்தது நமது பத்திரிகையின் அவசியத்தையும் பெருமையும் பற்றி அநேக நண்பர்கள் நமக்கு எழுதியுள்ளார். அவர்களெல்லோருக்கும் நமது நன்றியை இதன் மூலம் செலுத்துகிறோம்.

தமிழ்ச்சகோதர சகோதரிகளுக்கு ஒருவிஷயம் வெகு வற்புறுத்தித் தெரிவிக்கிறோம். இத்தென்னிந்தியாவிலும், பர்மா, சிங்கப்பூர், மோரீஸ் தென்னாப்பிரிக்கா முதலியவெளி நாடுகளிலும் வசித்துவரும் தமிழ்ச்சகோதர சகோதரிகள் கணக்கையும், அவர்களில் எவ்வளவுபேர் பாஷாபிமானங்கொண்டு தமிழ்ப்பத்திரிகைகளை வரவேற்றுப்படித்துவருகிறார்கள் என்பதையும் பார்த்தால் நமது தமிழ்ப்பாஷையை நாம் ஆதரித்து நமது கடமையை செலுத்தவில்லையென்று வெளியாகும்.



சென்ற சஞ்சிகையில் "தமிழணங்கு தம்மக்கட்கு அறிவுறுத்தல்" என்ற தலைப்பின்கீழ் நமது அன்பார்ந்த ஆசிரியர் ம-ா-ா-ஸ்ரீ, ஜி. சதாசிவம் பிள்ளையவர்கள், தமது வழக்கமும் சாதனமுமான உயர்ந்த செய்யுள் நடையில் எழுதியிருப்பதை படிக்கப்படிக்க தமிழ் மக்களின் கன்னெஞ்சும் கரையா திருக்குமோ ?

தமிழ் படிக்கவும் பேசவும் பழக்கமில்லையென்றும், தமிழ்ப் பத்திரிகைகளை படிக்க சாவகாசமில்லையென்றும், கூறுதல் இந்நாட்டாருக்கு அழகோ, கௌரவமோ? இவர்கள் அந்நிய பாஷையினரல்லரே. வயிற்றுப்பிழைப்புக்கும், கௌரவம் தனம் அடைவதற்கும், சாதனமான வேற்றுப்பாஷையை விரும்பிக்கற்றால் தாய் பாஷையைத்தள்ளுதல் நீதியோ? இவ்வாறு தாய்ப்பாஷையைக்கருதாதும் தாய்ப்பாஷைப்பத்திரிகைகளை ஆதரியாதும் படியாதும் இருந்து வருவது அழகோ? தாயைத்தள்ளிவைத்து தனியே வயிர் வளர்க்கும் பாதகத்துக்குள்ளாகார்களோ?

அந்தோ! பல தமிழ்மக்கள் பல பட்டங்களடைந்தும் கௌரவம் விரும்பி தொன்னூன் முறைகளை முழுதும் விட்டு தமிழிடம் வெறுப்புக்காட்டுதல் எவ்வளவு மதியீனமென்று அறிந்துகொள்ளவில்லையே! பொதுக்கூட்டங்களில் யாவர்க்குமுன்னர் முன் வந்து தாய் பாஷைக்கல்வி (Vernacular education)யின் அவசியத்தைப் பற்றி ஆங்கிலத்தில் பேசி, வீட்டிற்கு வந்தவுடன் இவர்கள் தமிழ்ப் பத்திரிகைகள் என்றால் வேப்பிலைக்கஷாயம் என்று எண்ணி விலக்குகிறார்கள். ஐயோ பரிதாபம்! தாய்ப்பாஷையான தமிழும்தெரியாது வயிற்றுப்பிழைப்புப்பாஷையான ஆங்கிலமும் முற்றத்தெரியாது திருசங்கஸ்வர்க்கத்தில் இருக்கிறார்கள்.

பாஷாபிமானம் இல்லையாயின் தேசாபிமானம் எவ்வாறுண்டாகும். தமிழ்ப்பத்திரிகைகளைப்போஷித்து தானும் தனது இல்லத்திலிருக்கும் புருஷன் பெண்டிர் மகன் மகள் யாவரும் படித்தும் தமிழ்ப் பாஷையிலேயே கருத்துக்களை வெளியிட்டும் தாய்ப்பாஷையில் அபிமானம் அடையவேணும். அவ்வாறான பாஷாபிமானம் இல்லையேல் இவர்கள் தேசாபிமானிகளெனத்தங்களை எண்ணிக்கொள்ளலாயக்கில்லாதவர்களாவர்.

ஆதலால் இனிமேலாகிலும் இத்தமிழை போஷித்து தமிழ்ப் புத்தகங்களையும் தமிழ்ப்பத்திரிகைகளையும் விடாது படித்து அவைகளின் பெருமையை யறிந்து முன்னேற்றமடையவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனதிருதாட்களையும் வேண்டுகிறோம்.

---

## அன்பு.

எங்கட்கினியரென் றெண்ணப்பட்டவர்
தங்கள்மேல் விருப்பம்தாமே நிகழும்
எங்கட் கியாரிடம் இச்சை நிகழுமோ
அவரிடத்தேயெமக் கன்பு நிகழும்
விரும்பப்பட்டவர் மேலே நிகழும்
உள்ள நெகிழ்ச்சியே யோதுமன் பாகும்
தந்தைதாய் மனைவிதனயராதியோர்
நங்கட்கினியராய் நவிலுமோமானால்
நீரிற்குமிழிபோல் நிலையிலா உடம்பு
நீங்கவே தொடர்பும் நீங்கியொழியும்
உடம்புத் தொடர்ச்சி யுள்ளகாலத்தும்
தீவினைப் பயன்றான் சேர்ந்தனுபவிக்க
உறவும் பகையா யுற்று நீங்குவரே
நல்வினைப்பயனை நாமனுபவிக்கப்
பகைவரும் உறவாய்ப் படருவாரன்றே?
தம்பயன் கருதியே தாமிதஞ்செய்வர்
ஆதலாலொருவரும் அன்பினரன்றே
நம்முயிர்க் கினியவர் நாமேயென்னில்
கேவலதசையில் கோராணவத்தால்
அறிவுந் தொழிலும் அணுத்துணை யேனும்
விளக்கமுறாது விரிசகலத்திலோ
சிற்றறிவாதியாற் செய்வினையோரா
இன்பதுன்ப இயல்பெலா முணர்ந்து
துன்பம் நீக்கிச் சுகமனுபவிக்கும்
ஆற்றலிலாமையா லன்பும் பொய்யே



ஆதலால்.

அநாதி கேவலத்தில் ஆணவமலத்தில்
உணர்வு முதலாம் ஒன்றுமின்றிக்
கிடந்த ஆன்மாக்களைக் கிருபைமேலீட்டால்
எடுத்தவன் கன்ம வியல்புக் கேற்பத்
தனுகரணாதியைத் தந்து பக்குவம்
வருதற் பொருட்டேவளர் சகலத்தினில்
பலதரம் விட்டுப் பாகமாகும்
இருவினை யொப்பு மலபரிபாகம்
எய்தியபின்னர் எழிற்குருவாகித்
தீட்சையாற் சஞ்சிதந்தன்னைத் தீய்த்தே
யாகாமியம் அணுகா வகையருளி
ஆன்மாவுடனே அபேதமாய்நின்றே
உடலொடு பிராரத்வத்தையும் போக்கிப்
பேரின்ப முத்திப் பேற்றினை நல்கும்
எம்பெருமானே யெமக்கினி யவனும்
இக்கருத்ததனால் "என்னில் யாரும்
எனக்கினியாரிலை யென்னிலுமினியவன்
ஒருவனுளனென்" றுரைத்தனர் மேலோர்
ஆகையால் அவரிடத்தன்பு செலுத்துக
அன்பும் பத்தியும் அபேதப் பொருளாம்
குடத்துவிளக்கும் தடத்து வாளும்போல்
காட்டக்காணும் காரியமன்றே
அன்பின் செயலா லனுமித்தறியலாம்
சிவபெருமான்றன் றிருவிளையாடலை
நினைக்கவுங் கேட்கவு நேர்மையாய்க்காணவும்
நேர்ந்தபொழுதெலாம் நிலைதடுமாறலும்
ஆடலும் பாடலும் அருவி சொரிதலும்
மெய்மயிர் சிலிர்த்தலும் விதிர் விதிர்ப்பெய்தலும்
ஆகிய இவையெலாம் அன்புடையாளமாம்
இவ்வன்புடையரே யெய்துவர் சிவனை
இவ்வன் பிலாதா ரெய்தவே மாட்டார்
நெக்கு நெக்குருகி நினைப்பவர் நெஞ்சகளே
புக்கு நிற்கும் புண்ணியனென்றனர்

என்பேவிறகா இறைச்சியை யறுத்துப்
பொன்போற் கனலிற் பொரியவறுப்பினும்
அன்போடுருகி யகங்குழைவார்க்கலால்
என்பொன் மணியை யெய்துதலரிதாம்
பற்பலபிறப்பிற் பயன்குறியாது
செயும் புண்ணியத்தாற் றிகழுமிவ்வன்பே
அன்பின் முதிர்ச்சியில் அரனார் விளங்குவர்
முதலிடை கடையென மூவகையன்பாம்
நாயகன் நாளும் நாயகி கேட்கவும்
தன்வசமழிதல் தலையன்பாகும்
கணவனைக்காணவுங் கூடவுங் கரைதல்
இடைகடை யன்பென்றிசைத்தனர் மேலோர்
மந்தபக்தியும் மந்ததரமும்
தீவிரபக்தியும் அதிதீவிரமும்
பக்தி நால்வகையாய்ப் பகர்ந்தனர் மேலோர்
குடுமித்தேவரைக் கும்பிடலாமென
நாணன் நவில நாகன் குமாரன்
தன்வசமழிந்தது தலையன்பன்றோ?
காளத்தி நாதர் கடைக்கணோக்கெய்தலும்
அன்பே யுருவமாய் அப்பனைத்தழுவி
மூவகை யன்பும் முறுகிவளர
இரும்பு பொன்னாகிய ஏற்றம்போலச்
சீவச்செயல் போய்ச் சிவச்செயலாகி
ஆறுதினங்களிலரனடி யடைந்த
கண்ணப்பரன்பைக் கழறவும் போமோ
வரகுணரன்பை வழுத்தவும் போமோ
மானிடர் நிற்க மற்றுள பிராணியில்
ஈயும் எறும்பும் புலியும் இபமும்
நாகமும் குரங்கும் நன்றுகொள் பசுவும்
காகமுங் கழுகுங் கானகமயிலும்
நாரையு மணிலும் நவிலும் சிலந்தியும்
அன்பினாலே யரனையர்ச்சித்துப்
பேரருள் பெற்ற பெருமை யெல்லாம்
அதனதன் பெயராலமைந்த தலங்களே
இன்றும் சான்றா யிலகுறுமன்றோ?
ஆதலாற் சிவனிடத்தன்பைச் செலுத்திச்
சீவச்செயலெலாம் சிவச்செயலாகப்
பேரின்பமுத்திப் பெற்றினையடைந்து
உய்குதும் உய்குதும் உய்குதும் யாமே.

ஜி. சதாசிவம் பிள்ளை,
"நீலலோசனி" நாகை.



# கருமியின் அருநிதி.

(61-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்தக் குரங்குப்பிடிக் கென்செய்வான் தீரன். காசுக்கடைக்குப்போய் அசுத்தக்கற்களைக் கிரயப்படுத்தி, தன்னைந்நூறு—ஆயிரம் ரூபாய்—நோட்டுகளையும், கிழவன் உயிலையும் பாங்கியிற் கொடுத்துச் சென்னபட்டண மனுப்பும்படி ஏற்பாடுசெய்து, ரசீது பெற்றுக்கொண்டு, ஹோட்டலுக்கு வந்து, கிழவனிடம் கிடைத்த பணத்தைக் கொடுத்து, அவன் சுசுரூஷையி லன்றிரவைக் கழித்தான். விடிந்ததும் முதியோன் சுந்தரனையழைத்து மதராஸ் செல்லுங்கப்பல் புறப்படுங்காலத்தை யறிந்துவரும்படிக்கும், அதிலோர் முதல் வகுப்புப் பயணச்சீட்டு வாங்கிவரவும் வேண்டினான். தீரன் தயங்கிப் பெரியவர் ஸீக்கின் அனுகூலப் பிரதிகூலங்களைத் தெரிந்து போவதாகக் கூறினதைச் செவியேற்காது, கிழவன், தன்னைப்பற்றிய கவலை இனி எவருக்கும் வேண்டாமாகையால் தன்முன்னிலையிலேயே தீரசுந்தரன் புறப்பட்டாலன்றித் தனக்குச் சமாதானப்படாதென்றும் மன்றாடிக்கூற, தடுத்துரைக்கக்கூடாமல் பிரயாணத்துக்கேற்பாடு செய்யலானான். டாக்டரிடம் கேஸைக் கைவிடாமற் கவனிக்கும்படிவேண்டி, ஹோட்டல் முதலாளி வழியாக ஓர் ஊழியனை நியமித்துத் தக்கபடி கிழவரை யுபசரிக்கத் திட்டஞ்செய்து, தாயைப்பிரிய மறுக்குங் கன்றெனப் பெரியவரின் ஆணைக்கயிற்றால் தளைக்கப்பட்ட தீரன் துறைமுகஞ்சேர்ந்து அப்பொழுதே நங்கூரந் தூக்கவிருந்த ஸ்டீமரிலேறினான்

இரண்டு நாளாயிற்று நடுக்கடலில். தூக்கத்திற்கூட விருத்தனின் பை தீரனுடையை விட்டகலவில்லை. கடல் அதிகக் கொந்தளிப்பின்றியிருந்தமையால் பிரயாணிகள் சுகமாகக் கரையை யெதிர்பார்த்து வந்தனர். மூன்றாநாள் சாயுங்காலத்தில் திடீரெனத் தீரசுந்தரனுக்குத் தலை கிறுகிறுத்து வாந்தியுண்டாயிற்று. இதை யறிந்த கப்பல் வைத்தியர் அவனை வந்துபார்த்து, கப்பல் வியாதியாயிருக்குமென்றுகூறி, குடிக்கவேதோமருந்து கொடுத்துப் படுத்துத்தூங்கினால் காலையிலனுகூலமாகுமெனச் சொல்லிப் போனார்.

பிறகு படுக்கையிற் சயனித்ததுமட்டுமே தீரனறிவான். காலை தலைவலி, நாவரக்ஷி, துர்பலம் இவைகள் வருத்தச் சற்றுவிழித்துக் கஷ்டத்துடனெழுந்துட்கார்ந்தான். இன்னும் வெளிச்சமாகவில்லை சுற்றிநோக்கினான். இரவில் அறைகதவு தாளிடவில்லையென்று நினைவுண்டாகித் திடுக்கிட்டுத் தன்னுடையைக் களைந்தான். உட்புறம் கிழிந்திருந்தது. மோசம் போனதையுணர்ந்து பையிருந்தவிடத்தைப் பார்க்கவே அது காணாமல் வேறு காகிதச் சுருளொன்றும் தனித்துண்டுக் காகிதத்தில், 'யானைக்கொரு காலம், பூனைக்கொரு காலம்' என்றெழுதப்பட்டிருந்ததையுமே தீரசுந்தரன் கண்டான்.

## 4. மனையேறல்.

சூரியோதயமாயிற்று. தீரன், செயல், நினைவற்றுத் தம்பித்துத் தன்னறையிலேயே உட்கார்ந்திருந்தான். கப்பல் நங்கூரம் பாய்ச்சப்பெற்றது: ஏனெனில் துறைமுகஞ் சேர்ந்தது. இச்சமயம் ஹார்பரி லேற்படுங் குழப்பம் பெருஞ்சந்தடியை யநேகர்கள் அறிவார்கள். தரைமீது சீக்கிரங் காலூன்ற இறங்குவோரும், தம்முறவினர், சிநேகிதர்களை யெதிரழைக்கவென் றேறிவருவோரும், பிரயாணிகளின் ஸாமான்களை யெடுத்துச்செல்லவருங் கூலிகளும், அவைகளைப் பரிசோதிக்கவென்று ஆரவாரிக்குங் கஸ்டம்ஸ், போலீஸ் உத்தியோகஸ்தர்களும், இன்னும் கூட்டமுள்ளவிடமெல்லாம் அதையதிகரிக்கச்செய்து தத்தம் தொழிலுக்குச் சமயமிதுவே யென்னுமாறு அங்கு திரளும் கேப்புமாரிகள், பிச்சைக்காரர்களும் ஒன்று சேருவது வெகுகுழப்பத்துக்கிடமாவது வழக்கம். இந்த ரகளைகள்கூட சுந்தரனைப்பற்றி யசைக்கவில்லை.

வசீகரவதனம், நல்லவுடை, அழகியநடையுடன் ஓரிளமாது, தன்னைச்சுற்றித் தான் காணவரும் மனிதனெங்கே யென்று சஞ்சலவிழிகளாலுற்றுப் பார்த்துக்கொண்டு கப்பல் மீது அவசரமாக வந்து கொண்டிருந்தாள். கடைசியாக தீரனறையிற் புகுந்து அவனைக் கட்டிக்கொண்டு, "அண்ணா! நீ சுகமாகத் திரும்பி வந்தது எனக்கெவ்வளவு ஸந்தோஷமாயிற்று," எனப் பரபரப்பாய் அவள் சொல்லவே, தூங்கி விழித்தவனைப்போல, "விமலா! என் பிரிய ஸகோதரி!! உன்னைக்காணவெனக்குள வானந்தத்துக்கு மிணை



யாது? இவ்வதிகாலையி லுன்னை யிங்கெதிர்பார்க்க வில்லையே," என்று மெதுவாக வுரைத்தான்.

விம:—"உனது தந்தியையே நீ வருவதுபோலெண்ணினேன்: நள்ளிருளானாலும் உன்னை வரவேற்கப் பின்னிடேன். தேகமிளைத்துக் கறுத்திருக்கிறாயே, சௌக்கியந்தானே?"

தீர:—தேகவசுகத்தை நேற்றுவரை யாதென்றறிந்திலன். சீக்கிரம் கரை யேறவேண்டும். பிறகு ஸாவகாசமாய்ப் பேசலாம்.

மோசம் நிகழ்ந்ததைக் கப்பல் மீதே வெளியிடுவது பயன்பெறாதென நிச்சயித்த தீரன்கூடிய சீக்கிரமிறங்கி, வெளிச்செல்லும் பாதையில் தன் தங்கையுடன் சிறிதுநேரம் நின்று தன்முன்னிறங்கிச் செல்வோர்களை நன்றாகக் குறிப்பிட்டு நோக்கினான். துண்டுக் காகிதத்தில் எழுதிய குறிப்பால் தன்னைக் களவாடியவர்கள் பர்மாவில் தானெதிர்த்துச் சிக்ஷித்த தீயர்களென்று அறிந்தானாகையால் ஒவ்வொருவர் நெற்றியையும் கவனித்துப் பார்த்தான். ஆனால் அவர்கள் பக்காப் பேர்வழிகள்: இதற்கு முன்னேயே வெகு தூரஞ்சென்று மறைந்தனர். எல்லோரும் இறங்கித் தத்தம்வழி சென்றனர். தீரன் தன் சாமான்கள், தங்கையுடன் ஓர் வண்டியில் அவள் வீடுநோக்கிப் புறப்பட்டான்.

(தொடரும்)

P. K. சர்மா.

---

# பிரகிருதி ஆராய்ச்சி விளக்கம்.

(115-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

**கிரஹங்கள் சந்திரன்கள். இவைகளின் பிறப்பு.**


எப்போது பிறப்பு என்றோமோ, அப்போது இவைகள் உண்டாகுமுன் ஒருகாலமிருந்தது என்று ஏற்படுகிறது. அப்போது என்ன இப்பிரபஞ்சத்தில் இருந்திருக்கவேணும்? சூரியன் ஒன்று மட்டும்தான் இருந்திருக்கும். அச்சூரியனும் பெரிய அனலைக்கக்

கும் ஜ்வாலே. அப்போது சூரியன் இன்று இருப்பதைவிட இளமையானது. இதுவரைகக்கி வெளிவந்த அனலேயும் ஜ்வாலேயையும் தன்னிடத்தே அப்போது வைத்திருந்தது. ஒரே அக்கினி பிண்டமாக இருந்து தன்னேச்சுற்றிச்சுற்றிவந்த காலமாக இருக்கும். அந்த அக்கினிபிண்டமானது அனலாலுண்டான பெரிய மேசம் போன்ற வஸ்துவாயிருந்து பிறகு சுற்றச்சுற்ற உருண்டை வடிவமைந்திருக்கும். அவ்வாறு சுற்றிச்சுற்றி உருண்டைவடிவமைந்த காலத்தில் அவ்வக்கினிமேகத்திலிருந்து சிற்சில பாகங்கள் சிதறிப் பிரிந்தன. அவ்வாறு சிதறியும் சுற்றிக்கொண்டே இச்சிறு பாகங்கள் இருந்தன. அப்பாகங்களே இக்கிரஹங்களாகும். நமது பூமியும் அப்படி சூரியனிடமிருந்து பிரிந்த பாகங்களில் ஒன்று. இவ்வாறு பிரிந்தபாகங்கள் சுற்றிச்சுற்றிவந்ததில் இவைகளினின்று இன்னும் சிறியபாகங்கள் சிதறிப்பிறிந்தன அவ்வாறு சிதறிப் பிரிந்த பாகங்கள் தான் சந்திரன்கள். எந்தெந்த கிரஹங்களிலிருந்து பிரிந்ததோ அந்தந்தப்பாகம் அந்த கிரஹங்களே விடாது சுற்றிக்கொண்டிருக்கின்றன. இந்தக்கிரஹங்களேவிட வெகுச்சிறிதாகையால் சந்திரன்கள் தங்கள் தாய்ப்பாகத்தை சுற்றிச்சுற்றி வருகின்றன. பூமியினின்று பிரிந்த ஒருபாகமான சந்திரன் பூமியைச் சுற்றுகிறதை பார்க்கிரேும். இவ்வாறு சிறிய பாகமான சந்திரன் சுற்றிவருவதில் அதில் இருந்த வெப்பம் அனல் எல்லாம் குறைந்து போயிற்று. இதைப்பற்றி விரிவாய் பின்னல் பார்ப்போம்,

### வால் நக்ஷத்திரங்கள்.

இப்போது நாம் வால் நக்ஷத்திரமென்றும் தூமகேதுவென்றும் கூறப்படும் வஸ்துவைமட்டும் கூறுவோம். இவைகள் வெகு விசித்திரமானவை. கிரஹங்களுக்கும் இவைகளுக்கும் வித்தியாஸங்களுண்டு. இவைகளே நாம் பார்க்குங்காலத்தில் அவைகளுக்குப்பின்னல் நீண்ட சடைபோன்ற வால் இருப்பதை யறிகிரேும். இவைகளும் சூரியனே சுற்றி வருகிறது. ஆதலால் சூரியமண்டலத்தில் இருக்கும் பல உலகங்களில் இவைகளும் சேரும் மற்ற கிரஹங்கள் போல ஒரே விதமாக சூரியனே சுற்றுகிறதில்லே. குறுக்கே வட்டவடிவமாய்ச்சுற்றுகின்றன:






இவ்வாறு சுற்றிவரும்போது ஒரு இடத்தில் சூரியனுக்கு வெகு சமீபமாய்ப்போய்க்கொண்டிருக்கும். எங்கே சூரியனுடன் கலந்து போய்விட்டதோ என்றுகூட எண்ண வேண்டிவரும். பிறகு சுற்றிக்கொண்டே சூரியனிடமிருந்து வெகு தூரமாகப்போய்விடும். இவ்வாறு போகும்போது ஒவ்வொரு கிரஹத்தின் பாதைகளே எல்லாம் தாண்டி வெகு தூரம் செல்லும். பிறகு வெகுதூரம் சுற்றிவிட்டு மறுபடி சூரியனே சுற்றவரும். ஆதலால் இவைகளும் சூரியமண்டலத்தில் சூரியவர்க்கத்தை சேர்ந்தனவே.

### நாம் இதுவரை ஆராய்ந்ததின் கருத்து:

நாம் வசிக்கும் பூமி பெரிய பந்துபோன்று பிரபஞ்ச வெளியில் மிதந்து கொண்டிருப்பதாயும், இதேவிதமாக சூரியன் கிரஹங்கள் கணக்கற்ற நக்ஷத்திரங்கள் இவ்வெளியில் மிதக்கின்றனவென்றும், இப்பிரபஞ்சவெளியில் நமது பூமி ஒரு சிறிய புள்ளியவ்வளவு கூடவில்லேயென்றும், தூரதிருஷ்டிக்கருவிகளேக்கொண்டு பார்க்க ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஒவ்வொரு மண்டலமாக இருப்பதில் நமது கண்ணுக்கு நன்ருக புலப்படும் சூரியன் ஒரு நக்ஷத்திரமாகவும் மண்டலாதிபதியாகவும் இருக்கின்றதென்றும், பூமியும் மற்ற கிரஹங்களும் அதன் பாகங்களாய்ச்சிதறித்தனித்து வந்து சுற்றுகின்றனவென்றும், ஒவ்வொரு கிரஹமும் சூரியனிடமிருந்து இவ்வளவு தூரத்தில் இருக்கின்றதென்றும் இவைகளேத்தவிர்த்து பிரிந்த பாகங்களான கிரஹங்களிலிருந்து இன்னும் சில சிறிய பாகங்கள் சிதறி சந்திரன்களாக ஆகி பிரிவுக்குமுன் சேர்ந்த கிரஹங்களே அவ்வவை சுற்றுகின்றனவென்றும், இவைகளேத்தவிர்த்து வால்மீன்களும் சஞ்சரித்து சூரியனேச்சுற்றிவருகின்றனவென்றும் கூறினேம்.

(தொடரும்)

K. ஜகதீசன் பி. ஏ.

# ஸ்ரீயுத சித்தரஞ்சன தாஸர்.

(121-ம் பக்கத்தொடர்ச்சி)

இது இவ்வாறு இருக்க இந்தியாவில் வெகு சம்பவங்கள் உண்டாயின. அவைகளைக்குறுக்கி இவ்விடம் எழுதவேண்டியது அவசியமே. வங்காளமாகாணம் லார்ட்கர்ஸன் பிரபு இந்தியாவின் வைஸராயாக இருந்தபோது ஜனங்களின் மன இஷ்டத்துக்கு விரோதமாக இருபிரிவினைகளாக செய்யப்பட்டதென்று நம்மெல்லோருக்கும் தெரியும். பிறகு இவ்வாறு பிரிவினை செய்தது பிசகென்று கண்டனக்கூட்டங்கள் நடைபெற்றகாலத்தில் அக்கூட்டத்தை கலைத்ததும் தலைவர்களை தண்டித்ததும் அவமானப் படுத்தியதும் யாருமறிவர். 1906-ம் வருஷம் முதற்கொண்டு வங்காள தேசம் முழுவதும் ஏககுழப்பமாயிருந்தது. பல கொள்ளைகளும் உயிர்ச்சேதங்களும் உண்டாயின. வெடிகுண்டுகள் ராஜாங்க விரோதிகளான கலகக்காரர்களால் உபயோகப் படுத்தப்பட்டன வென்றும் தெரிகிறது. டெக்காவில் ஜில்லா மேஜிஸ்ட்ரேட்டாகவிருந்த மிஸ்டர் அல்லன் என்றவர் சுடப்பட்டார். சந்திர நாகூர் என்ற ஊரின் தலைவர் (Mayor) வீட்டில் வெடி குண்டுகள் போடப்பட்டதாயும் சொல்லப்பட்டது. முஸபர்ப்பூர் என்ற இடத்தில் மிஸ்ஸிஸ் கென்னடி மிஸ் கென்னடி என்ற இரு ஐரோப்பிய பெண் பாலர்கள் போய்க்கொண்டிருந்த வண்டியில் ஒரு வெடிகுண்டு போடப்பட்டு அவ்விருமாதர்களும் உயிர் துறந்தார்கள்:— முஸபர்ப்பூர் ஜட்ஜ் மிஸ்டர் கிங்க்ஸ் போர்ட்டு (Mr. Kingsford) என்பவருக்கு தபால் மூலம் ஒரு வெடிகுண்டு அனுப்பப்பட்டது. மேற்சொன்ன சம்பவங்கள் 1908-ம் வருஷம் ஏப்பிரல் மாதம். மேற்கண்ட இரண்டு மாதர்கள் மீது அனியாயமாய் வெடிகுண்டு எறியப்பட்டதற்கு குதிராம்போஸ் தினேச சந்திராய் என்ற இருவர்களை கைது செய்யப்பட்டது. தினேச சந்திராய் கைது செய்யப்பட்டபோது தன்னையே சுட்டுக்கொண்டு விட்டான். குதிராம்போஸ் தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளத் தூக்கி விடப்பட்டான்.



மே மாதம் 2-ம் தேதி மாணிக்தாலா என்ற இடத்தில் ஒரு தோட்டத்திலும் கல்குத்தாப்பக்கங்களிலும் ஏராளமான குண்டுகள், வெடிமருந்துகள் துப்பாக்கிகள் ஒளிக்கப்பட்டிருந்தவைகள் கண்டு பிடிக்கப்பட்டன இது விஷயமாக இராஜ சக்ரவர்த்தியுடன் போர் புரிந்து இராஜ்யத்தை பிடுங்கிக்கொள்ள யெத்தனித்த குற்றங்களுக்கு வேண்டிய அம்சங்கள்வெளியாயின. 34-பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். நரேந்திரகோசேன் என்பவன் அவர்களில் ஒருவன் ; அவன் ஒத்துக்கொண்டான். இக்கேசு பிரதம விசாரணைக்குமுன் பலவிஷயங்கள் போலீசு காரர்களால் தெரிய வந்தது. பல பெரிய படிப்பினர்களும் உன்னத பதவியுள்ளவர்களும் சேர்ந்திருப்பதாக தெரியவந்தது அவர்களில் ஒருவர் ஸ்ரீயுத அரவிந்தகோஷ் ; இவரை போலீஸார் வந்து கைது செய்தார்கள். இவரையும் ஒரு எதிரியாக சேர்த்து கேஸ் நடத்தப்பட்டது.

இப்போது இவ் வரவிந்தரைப்பற்றி சிறிது சொல்ல அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இவர் 1872-ம் வருஷம் கல்குத்தாவில் பிறந்து டார்ஜீலிங்கு ஸென்ட்பால் பள்ளிக்கூடத்தில் கல்விபயின்று இங்கிலாந்துக்கு 7-வயதிலேயே அனுப்பப்பட்டு படித்தவர் ; 1890-ம் வருஷம் இந்திய ஸிவில்ஸர்விஸ் பரிக்ஷைக்கு ஆஜர் ஆகி கல்விசம்பந்தமாய் தேறுதல் அடைந்து குதிரை யேற்றத் தேர்ச்சியில்லை என்ற காரணத்தால் கலக்ட்டர் வேலைக்குவர லாயக்கில்லாமற் போனவர், அவர் அவ்வாறு வேலையில் அமராமற்போனது இந்தியா செய்த அதிருஷ்டம். இங்கிலாந்திலிருந்து இந்தியா வந்து பரோடாவில் ஸ்தானங்கள் வகித்து கடாசி உயர்தரக் கல்லூரியில் பெரிய போதகர்ஸ்தானத்தை வகித்தவர் வங்காளத்திலும் பம்பாயிலும் பஞ்சாபிலும் வரம்பற்ற கொடுமைகள் ஜனங்கள் அடைந்ததாக எண்ணி மனங்கசிந்தார். வங்காளப்பிரிவினையை சகியாது, இருக்கும்போது, 1906-ம்வரு மார்ச்சுமாதம் பாரிஸாலில் மாகாணகான்பரன்ஸ்கூட்டம் நடந்தகாலத்தில் ஜில்லாமாஜிஸ்ரேட்டால் கூட்டங்கள் கலைக்கப்பட்டும் அக்கூட்டங்களுக்கு சென்றிருந்த டெலிகேட்டுகள் தொண்டர்கள் போலீஸாரால், அடிக்கப்பட்டும் மிஸ்டர் எமர்சன் என்ற மேஜிஸ்ட்ரேட்டால் அக்காலத்து வங்காளமன்னனெனவிருந்த ஸுரேந்திர பிரபுவும் சிக்ஷிக்கப்பட்டு 200-ரூ அபரா

தம் விதிக்கப்பட்டும் உண்டான சம்பவங்களைபார்த்து நினைந்து நினைந்து உருகினார். தேசீய உழப்பை மேல்கொண்டு கல்குத்தாவிலேயே தங்கினார். ஜனங்களை ராஜீயவிஷயங்களில் தேர்ச்சிசெய்ய வெண்ணி ஸ்ரீயுத விபினசந்திரபாலரால் ஸ்தாபிக்கப்பட்ட 'வந்தேமாதரம்' என்னும் பத்திரிகை ஒரு ஜாயிண்டுஸ்டாக் கம்பெனியாகப் போனபின் அதில் வெகு ஊக்கத்துடன் உழைத்தார். 1907-ம் வரு இந்தியன் நேஷனல் காங்கிரஸ் இருவகுப்புகளாகபோனதில் அமிதவாதிகள் என்னும் வகுப்பினர்களுக்குத் தலைமைபூண்டு மிதினபுரி ஜில்லா கான்பரன்ஸ் ஸபையில் வேலைசெய்தார். இவருக்கும் விரோதி என்ற ஒருவர் இருப்பாரானால் அவர்கூட இவரது குணத்தையும் யோகநிலையையும் வேதாந்த உணர்ச்சியையும் வியக்காது இருத்தல் முடியாது.

இவரும் அலிப்பூர் சதியாலோசனையிலும் அது சம்பந்தமான கொலைக்கேஸுகளிலும் ஒரு எதிரியாயிருந்தார். மேமீ 18-ம் தேதி முதல் பிரதம விசாரணை ஆரம்பமாயிற்று இந்தக் கேஸை எப்போதும் தங்கள் தரப்புக்கு ஆஜராகும் கவர்ண்மெண்டு பப்ளிக் பிராசிக்யூடரிடம் கொடுக்காமல் சென்னையிலிருந்து வரவழைக்கப் பட்ட மிஸ்டர் இயர்ட்லி நார்ட்டனிடம் சர்க்கார் ஒப்புவித்து நடத்தினார். கேசு ஸெஷன்ஸ் கோர்ட்டில் வெகு மும்முரமாக நடத்த ஏற்பாடும் எடுத்துக்கொள்ளப்பட்டது; அரவிந்தருக்கு ஸ்ரீயுத சித்தரஞ்சனதாஸர் ஆஜரானார். 1908-ம் வருஷம் அக்டோபர்மீ முதல் 1909-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் வரை விசாரணை நடைபெற்றது. சாக்ஷிகள் பல பேர்கள் விசாரிக்கப் பட்டும், தஸ்தாவேசுகள் ஆயிரக்கணக்காக தாக்கல்செய்யப்பட்டும் மிஸ்டர் நார்ட்டன் கவரண்மெண்டு தரப்புக்கு நன்றாகவாதித்தார். அரவிந்தருக்காக தாஸர் 8 நாள் வாதித்துப் பேசினார். இவர் கேசு நடத்தும் காலத்தில் ஒவ்வொரு நாளும் எண்ணிலடங்காத ஜனங்களும் ஏராளமான கற்றறிவாளரும் வந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். சித்தரஞ்சனதாஸர் எடுத்துக்காட்டிய சட்டத்தேர்ச்சியையும் அவர் பேச்சின் திறத்தையும் மேன்மையையும் புகழாதவர்கள் கிடையாது. இவரது வாதம் (Address) கேட்கக் கேட்க நாளுக்கு நாள் ஜட்ஜிக்கு இவரிடம் வியப்பு அதிகரிக்கத்தொடங்கியது. இதுவரை



தனக்குவமையற்ற சீருடன் இருந்துவந்த மிஸ்டர் நார்ட்டன் மனதிலும் தன்னைக் கீழ்படுத்தக்கூடிய இந்திய பாரிஸ்டர் இருப்பதாக எண்ணம் உண்டாயிற்று. அஸெஸர்கள் 'அரவிந்தர் குற்றவாளி இல்லை' என்று அபிப்பிராயம் சொன்னார்கள் செஷன்ஸ் ஜட்ஜ் வெகுநாள் யோசித்து கடாசியில் அரவிந்தர் ஸம்மந்த மட்டில் அஸெஸர்களின் அபிப்பிராயத்துக்கிணங்கி அரவிந்தரை விடுதலை செய்தார். இக்கேஸ் நடத்திய சித்தரஞ்சனதாஸருக்கு உண்டான ஆனந்தத்துக்கு அளவேயில்லை. ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு மனிதன் வாயிலும் சித்தரஞ்சனர் நாமமும் பேச்சுமே வந்தன. இந்தக்கேஸில் சித்தரஞ்சன தாஸருக்கு பண உதவியில்லை என்று நாம் சொல்லவேண்டுவது அனுவசியம். இவருக்கு பண விஷயத்தில் கொஞ்சம் சங்கடம் ஏற்பட்டுவந்தபோதிலும் இந்த கேஸில் இவர் உழைத்ததால் இவருக்கு கீர்த்தியும் கௌரவமும் உண்டாகியது. கேஸுகள் வர ஆரம்பித்தன. இதுவரை இவரை தெரியாத பேர்களும் தங்கள் கேஸுகளை இவரிடம் கொடுத்தால்தான் நல்லதெனக்கருதி கொடுத்தார்கள். லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாயிற்று. பணத்தை வாரிக்கொட்ட ஆரம்பித்தார். கூடிய சீக்கிரம் ஏராளமான பணம் சேர்த்தார். பணம் அதிகமாக சேர்ந்து வரும்போது தனது தகப்பனாருடைய கடன்களையெல்லாம் தான் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டபடி வட்டியுடன் ஒரு பைசு பாக்கியில்லாமல் கொடுத்துவிட்டார். ஜட்ஜ் முதல் சாதாரண மனிதன் வரையிலுள்ள எல்லோரும் இவரது உதார குணத்தையும் குடும்பமதிப்பைக் காப்பாற்றின பெருமையையும் கொண்டாடினார்கள். ஜட்ஜிகள், பெரிய உத்யோகஸ்தர்கள், இதர பாரிஸ்டர்கள் முதலிய எல்லோரும் இவரிடம் வெகு மதிப்பும் மரியாதையும் வைத்தார்கள்.

(தொடரும்)

ஒரு தமிழன்.

# கெடுப்பதொழி.

இது ஞான மாதாவாகிய ஔவைப்பிராட்டியாரின் அமுத வாக்கு. "நீ பிறரைக் கெடுப்பதை யொழித்து விடு" என்பது இதன் கருத்தாகும். கெடுப்பதென்றால் பிறர் அடையும் நன்மைகளைக்கண்டு பொறாது அவர்களுக்குத் தீங்கிழைத்தல்; பிறர் நம்மைப்போல் மேன்மையுறக் கூடாதென்ற எண்ணத்தால் தீங்குபுரிதல்; பிறர், தமக்குச்செய்த தீமைக்குப் பதில் கேடு சூழ்வித்தல் பிறரைக் காரணமின்றி யின்னலடையச் செய்தல்; பிறருக்கு வேண்டுமென்றே குறும்பாகத் தீமை செய்து கெடுத்தல்; இன்னும் பலவுமாம்.

அநேகமாய் ஒருவர்க்கொருவர் தீங்கிழைத்துக் கொள்வதற்குக் காரணங்கள் இரண்டே ஆகும்; ஒன்று பொறாமை; மற்றொன்று அறிவின்மை. நம்மைப் பார்க்கிலும் பிறர் மேன்மையுறினும், அதற்குரிய நிகழ்ச்சிகளை புரியினும், நம்முடைய அளவுக்கே அவர்கள் வரும் உத்தேசத்திலிருந்தாலும், அவர்களைக் கெடுக்க நமது மனம் நாடும். காரண மென்னவெனில், அவர்கள் நம்மைப்போல் வந்துவிட்டால் அல்லது நமக்குமேல் உயர்ந்துவிட்டால், நமக்குள்ளமதிப்பும், அதிகாரமும் குறைந்துவிடுமே என்ற கவலையேயாகும். பிறருக்குத் தீங்கு செய்யக் கருதும் நம்மை, நமக்குக்கீழான கேவலமான நிலையிலிருப்போர்கள், நம்முடைய அந்தஸ்தை நோக்கி பொறாமையுற்று நமக்கும் இன்னலிழைக்கக் கருதலாமன்றோ! பிறருடைய முன்னேற்றத்தையும் நலத்தையுங் கெடுக்கமுந்தும் நமது மனமானது நமக்கு கீழான நிலையிலிருக்கும் மனிதர்களைக்கண்டு நாமும் அவர்களைப்போல் ஆகிவிடமாட்டோமா என்று என் எண்ணவில்லை? பொறாமையானது இருவழியிலுஞ் செலுத்தப்பட்டால் நடுநிலையாகும். பிறருடைய உயர்வையும், நல்ல நிலையையும் பார்த்துப் பொறாமையுற்றுலுறுவோம். நமக்குத் தாழ்ந்தோர்களைப் பார்த்துப் பொறாமைப் படுவது மாத்திரம் இல்லை. பிறர் நம்முடைய அளவுக்குமேல் உயர்ந்துவிட்டால் அடடா! நாம் என்னென்ன எண்ணுகின்றோம்! நம் எண்ணத்தில் மண்விழாதா? நாம்



இட்டதற்குமேல் ஏற ஆசை கொண்டால் இட்டுமா? நாம் பிறருடைய நன்மைகளைக்கெடுக்க முயர்ச்சிப்பது போல் பிறரும் நம்மைக் கெடுக்க முயலுவார்களன்றோ! நந்திறன் அவர்கட்கின்றோ! அவர்களும் நம்மையொத்த மனிதர்களன்றோ! நமக்குண்டாகுந் தீயஎண்ணமும் அவர்கட்குண்டாக வெகுநேரமா? அவர்களுடைய தீயசெய்கையால் நாம், கெடமாட்டோமா?

மனிதராகப் பிறந்த நமக்கு உண்டாகும் பலாபலன், நாம் முற்பிறப்பிற்செய்த வினையின் பிரகாரம் வந்து சம்பவிக்கின்றது. அதைப்போலவே மற்றோர்க்கும் அவர்கள் புரிந்துள்ள வினைக்கீடாக நன்மை தீமைகளை துய்க்கின்றார்கள். அதைப்பற்றி நமக்குப் பொறாமையேன்? நாம் முற்பிறப்பில் எத்தீவினைகளைச் செய்தோமோ, அவைகளின்பயனாக நமது மனதின்கண் பலதீக்குணங்களும் நல்ல குணங்களை யெல்லாம் தலையெடுக்கவொட்டாமல் அழுத்திவிடுகின்றன. இதையறிந்தே நாம் இப்பிறப்பில் நன்மையான காரியங்களைச் செய்து மறுபிறப்புக்காவது நல்வழி தேடவேண்டுமன்றோ!

எப்போதும் பிறருடைய காரியங்களைக்கெடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடனேயே உறக்கங்கொள்ளுந்தீயர்களாகிய நமக்கு ஈஸ்வரன் துணை கிடைக்குமா? மற்றும் ஜனங்கள்தாம் நம்மை நேசிப்பார்களா? நம் கெட்ட எண்ணத்தை யறிந்த பின்னரும் அவர்கள் நம்மைமதிப்பார்களா? நம் வேலைகளாகிலும் ஆகப்படுமா? ஒரு பயனுமிராது. பொறாமையின் காரணமாக நாம் பிறரைக்கெடுக்க முற்படுவோமாயின், நாமே நமக்குக்குழி வெட்டிக்கொள்வதுபோல் நமக்குத் துன்பத்தை நாமே தேடிக்கொள்வோர்களாக ஆவோம். ஆதலின் பொறாமையின் மேலீட்டால் பிறருக்குத்தீங்கு செய்தல் வேண்டா. அதனால் ஒரு பயனுமின்று. பிறர் காரணங்கொண்டோ அல்லது காரணமில்லாமலோ நமக்குத்தீமை செய்கிறார்கள். அவர்களுக்கு நாம் தீங்கு செய்வதா? செய்யக்கூடாதா? என்ற வினாவும் இவண் போதலாம். நமக்குப் பிறர்தீங்கு செய்வதை எண்ணுங்கால், நாம் முன்னமே அவர்கட்குத் தீங்குசெய்திருப்பின், நாம் ஏற்கனவே புரிந்துள்ள தீமைக்கே இது பிரதிபலன் என்று கருதி நாம் வாளாவிருந்துவிடல்வேண்டும். அவ்வித

மல்லாமல் நாமும் அடுத்தடுத்து அவர்கட்குத்தீமை செய்யப்புகின் அவர்களும் அவ்விதமே செய்ய முற்படுவார்கள். புலிகள் ஒன்றுடன் ஒன்று எதிர்த்துப்போர்புரிந்து இரண்டும் துன்புறுவதுபோல் நாமும் துன்புறுவோம். "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையாதா"? வினை விதைத்தவன் வினையையறுத்துத்தானே ஆகவேண்டும். அதைப்போலவே நாம் பிறருக்குச்செய்த தீமைக்குப் பிரதியாக நமக்குத்தீமை நிகழ்த்தப்படின் அனுபவிக்கவேண்டியது கடமையேயன்றோ!

நாம் பிறருக்குத்தீமை செய்யாமலிருக்கும்போதே பிறர் நமக்குத்தீமை செய்கிறார்கள். ஆனால் இஃது எப்போதும் நடைபெறாது, ஏக தேசமாகவே நடைபெறும் இவ்விதமாக நமக்குத தீங்கு நேரிட்டுவிடின் அதற்காக நாம் என்னசெய்ய இருக்கிறது. ஈசுவராக்கினையே இவ்விதம் நம் வினைக்கு ஈடாகச்செய்திருக்கிறது என்று மனத்திருப்தியுடன் பொறுத்துக்கொள்ளவேண்டும். நாம் முற்பிறப்பில் செய்துள்ள இருவினைக்கும்மாறாக இப்பிறப்பில் நடைபெறுதல்லவா? நாம் செய்துள்ள வினையின்பயனை நாம் துய்க்கவேண்டுவது அவசியமென்றாலும் இவ்விதமான சந்தர்ப்பங்களில் நாம் கடவுளை நொந்துகொள்ளக்கூடாது. "செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தாவதென்ன? ஆதலின் பிறர் நமக்குக்காரணமின்றி தீங்குசெய்தாலும், அதை முற்பிறப்பிற்செய்த வினையின் பயனென்றெண்ணி சும்மா இருக்க வேண்டுவது நம் கடமை இஃதிங்ஙனமாக, நாமே வேண்டுமென்று பிறருக்குத்தீங்கு செய்வது நமது முடிவு காலம் வரையில் கூடவே கூடாது. ஒவ்வொருவரும் இதை அவசியம் கவனிக்க வேண்டும். இதை அனுபவத்திலும் கண்டு தெளியவேண்டும். நாமே பிறருக்குத்தீங்கு செய்வதால் என்ன சுகத்தையனுபவிக்கின்றோம். நாம் இன்றைக்குப்பிறருக்குத்தீங்கு செய்தால் பிறர் நாளைக்கு நமக்குத்தீங்கு செய்வார்களல்லவா? "ஈட்டுக்கீடுதானே."

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்" என்பர் (திருவள்ளுவர்)

கெடுவான் கேடுநினைப்பான் என்பதேபோல் நமக்குக் கேடுதேடிக் கொள்ளவேண்டுமானால் பிறருக்குக்கெடுதிசெய்ய நாம் முற்பட



லாம். நமக்கு எப்போதும் சுகம் உண்டாக வேண்டும்; நமக்கு ஒரு துன்பமும் உண்டாகக்கூடாது; என்பன போன்ற பலஎண்ணங்களில் நாம் புகுந்துகிடக்கின்றோமன்றோ! அவ்விதமே யல்லவோ பிறரும் எண்ணுவார்கள். நமக்குத் துன்பந்தருமவைகளை நாம் எப்படி வேண்டாமென்று கருதுகிறோமே அவ்விதமே அத்துன்பம் பிறருக்கும் வேண்டா, என்று கருதி நாம் பிறருக்குத் தீங்குசெய்யாமல் இருக்கவேண்டும்.

"இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்" என்பர். (நாயனார்)

"வினைதானொழிந்தால் தினைப்போதளவும் நில்லாத இந்தத்தேகம் எப்போதும் இருப்பது பொய் போவது மெய்யென்று எண்ணி நாம் ஒருவருக்குந் தீங்கு செய்யக்கூடாது. பிறர்க்கு நாம் கெடுதி செய்வதால் நமக்குத் திரண்ட செல்வமும் பெருமையும் உண்டாவதாக இருந்தாலும் நாம் ஒருபோதும் பிறருக்குத் தீங்கு செய்யவே கூடாது. பிறர் தமக்குத் தீங்கு செய்தாலும், பெரியோர்கள் அவர்களுக்குத் திரும்பவுந் தீங்குசெய்யமாட்டார்கள். நாய் கோபங்கொண்டு நம்மைக் கடித்தால் நாம் திரும்பவும் அதை கடிக்கின்றோமா? இல்லை. அதைப்போலவே பிறர் நமக்குத்தீமை செய்தால் அதற்குப் ப்ரதிதீமை செய்யக்கூடாது. உன்னை ஒருவர் ஒரு கன்னத்திலடித்தால் மற்றொரு கன்னத்தையுங் காட்டு" என்பர் பிறமதத்திலும்.

நமக்குப்பிறர் கெடுதிசெய்தவிடத்து நாம் இவர்களை யெப்படி தண்டிக்கவேண்டுமென்னில் நமக்கு அவர்கள் செய்த தீமைக்காக நாம் நன்மை செய்தே தண்டிக்கவேண்டும். இதையே.

இன்னாசெய்தாரை யொறுத்த லவர் நாண
நன்னயஞ் செய்து விடல் என்று புகன்றனர் பெருநாவலர்.

ஆதலின் நமக்குப்பிறர் காரணங்கொண்டோ காரணமில்லாமலோ தீமைசெய்தாலும் நாம் அவைகளைப் பொறுத்துக்கொண்டு அவர்கட்கு வேண்டிய நன்மைகளையே செய்துகொண்டுவர நம்முடைய மனதை நல்வழி பாற்றிருப்புவோமாக.

மு. மாணிக்க நாயகர்.
தமிழாசிரியர், கூனிச்சம்பட்டு.
புதுவை

# பத்திரிகா விருந்து.

**உலகத்திலேயே அதிக பாரமுள்ளோர் :—**

ஜெர்மனி தேசத்தின் தலைநகரான பர்லின் (Berlin) என்னும் நகரத்தில் சகோதர சகோதரிகள் 3 பேர் இருக்கின்றார்களாம். அவர்களில் சகோதரர்கள் முறையே 18,17-வயதுகளும் சகோதரி 14-வயதும் உடையவர்களாம். அவர்கள் மூவரையும் சேர்த்து நிறுத்ததில் மொத்தம் 1, 135 பவுண்ட் நிறை இருக்கின்றார்களாம்.

**பூமியிலிருந்து ஆவியாக்கப்படும் நீர்:—**

உலகத்தில், ஒவ்வொரு நிமிடமும் சூரியனால் ஆவியாக்கப்படும் ஜலம் 37, 000,000,000 டன்கள் நிறையென கண்டுபிடித்திருக்கிறார்கள்.

**அற்புத விவாகம்:—**

இலண்டன்மாநகரில், "விவசாய ஹாலில் ராபர்ட்கோடின் என்ற மூன்றடி உயரக் குள்ளருக்கும், குறுக்கேவளர்ந்த சீமாட்டிகளில் ஒருவளான ரவிட்ரிஸ்டி என்ற சீமாட்டிக்கும் மணமகோற்சவம் நடந்ததாம். மணமகரான கோடின் என்பவர் 41 வயதும் 42-பவுண்டுகள் நிறையினும் இருக்கிறார். மணமகள் 21-வயதும் 322 பவுண்டுகள் நிறையினுமிருக்கிறாள்.

**சிறு துப்பாக்கி:—**

சமீபகாலத்தில் அமெரிக்காவிலுள்ள நியூயார்க்நகரத்தில் (New York City) நடந்த கண்காக்ஷிசாலையில் போலீஸாரால் அற்புதமான காக்ஷி ஒன்று செய்யப்பட்டுள்ளது. அது ஒரு கைத்துப்பாக்கி. அஃது நமது அங்கையில் வைத்துக்கொண்டு மூடிக்கொள்ளலாம். அவ்வளவு சிறிய துப்பாக்கி 12 குண்டுகளை உடையது. ஒவ்வொரு குண்டும் பலமாகவே செல்லுகின்றன. அம்மாதிரி தற்பொழுது 4, 5, துப்பாக்கிகளே செய்யப்பட்டிருக்கின்றன.

**அதிகத்துகை செலவு:—**

பார்லிமெண்டு மகாசபையை (The House of Parliament) கட்டுவதற்கு 3,500,000 பவுன்கள் செலவாயின என்றால் கட்டடம் எவ்வாறிருக்கும் என்பதை நேயர்களே யூகித்துக் கொள்ளலாம்.

**கடற் பாசி:—**

பசிபிக் மகாசமுத்திரத்தில் வளர்ந்துள்ள பாசிகளில் அதிக உயரமுள்ளது 300-அடியுள்ளதாம்.

பத்திரிகாசிரியர்.



# ஜீவன்-உற்பத்தி.

ஸகல விடங்களிலும் நிறைந்திருக்கும் பரமாத்மாவாகிய, ஸர்வேச்வரரை நமஸ்கரித்து நாம், ஸகலேச்வரினணுவாகிய ஜீவன் என்பதைப்பற்றி இவ்வியாசத்தை யெழுதுவோம்.

எங்கும் நிறைந்தவராகவும், ஆதியந்தமில்லாதவராகவும், ஒருவிதமான நிறமுமில்லாதவராகவும், ஜோதிமயமாகவும் ஆனந்த ரூபமாகவும், ஸர்வ சக்தியுள்ளவராகவும் சிருஷ்டித் திதி சம்ஹாரகர்த்தாவாகவும் இருக்கும் சக்திக்கு பரம்பொருள் அல்லது வடமொழியில் பரமாத்மா என்று பெயர்.

இப்பரம்பொருளாகிய இந்தப் பரமாத்மாவின் சிருஷ்டிதான் இப்பிரம்மாண்டம் முதலியவை. உண்மையாக யோஜித்துப் பார்த்தால், இவ்வுலகம், அதிலிருக்கும் பொருள்கள் முதலியவையெல்லாம் மாயையின் காரணமாகும். சற்றுமுன் நாம் எங்கும் பரம் பொருள் இருக்கிறார் என்று சொன்னதால் நமக்குத் தெரிய வருவது என்னவென்றால், நமது கர்ம நேத்திரங்களுக்குப் புலன் படுபவையெல்லாம் தோற்றங்களேயொழிய வேறொன்றுமில்லை என்பதாகும். இத்தோற்றங்கள் நமது கண்களுக்குத் தென்படுவதால் அவை வாஸ்தவம்போல் நமக்குத்தோற்றுகின்றன. ஆனால் "எங்கும் பரம்பொருளிருக்கிறார்" என்னும் சொல்லினால் அவை பொய்போலவும் தெரிகின்றன. இப்படியெல்லாம் தோற்றுவதன் காரணம் மாயையினால்தான். இம்மாயையின் காரியங்களையறிய யாவராலும் முடியாது. இப்பொழுது நமக்குத்தெரிகிறதென்னவெனில் "நசிக்கக்கூடிய பதார்த்தங்கள் பொய்; அவைகள் மாயையின் காரணம்" என்பதாகும்.

இதனால் இப்பொழுது நாம் மற்றோர் தத்வத்தைத்தெரிந்து கொள்ளலாம். அஃதென்னவெனில், நமது சரீரமும் மாயையின் காரியம் தான் என்றவாறு. அஃதெப்படி யென்றால் நமது சரீரம் நசிக்கக் கூடியது என்கிற ஒரே தத்வத்தாலாகும். இச்சரீரம்

அநேகவிதமான காரியங்கள் செய்கிறதல்லவா? உதாரணமாக புண்யம், பாபம் முதலியவைகளைச் செய்கிறதல்லவா? இப்படிச்செய்வதற்குக் காரணமாக ஏதாவதோர் சக்தியிருக்க வேண்டுமல்லவா? ஏனென்றால் இது மாயையாக விருக்கமுடியாது. ஏனெனில் மாயையென்பது ஒரு விதமான தோற்றத்தை யுண்டாக்க முடியுமேயொழிய, ஒரு விதமான சக்தியை யுண்டாக்க முடியாது. ஆகையால் இச்சக்தியானது மாயையல்ல வேறு ஏதாவதாக இருக்க வேண்டும். இது தவிர இச்சக்தியானது எப்பொழுது மிருக்கிறதாக இருக்கிறது, ஆதலால் நாம் தெரிந்துகொள்ள வேண்டியதென்னவென்றால், இச்சக்தியானது பரமாத்மாவைத்தவிர வேறொன்று மில்லையென்பதுதான். ஏனெனில் பரமாத்மாவைத் தவிர வேறு நித்யபதார்த்தம் ஒன்றுமில்லை என்னும் காரணத்தால் தான் இப்படி பரமாத்மாவானவர் மாயாக்கூடாகிய கர்ம சரீரத்தில் இருக்கும் பொழுது அவருக்கு, ஜீவாத்மா என்று பெயர்.

நாம் இப்பொழுது ஜீவாத்மாவின் உற்பத்தியைப்பற்றி சற்று கவனிப்போம். பரமாத்மாவானவர், முதலில் பிரம்மாண்டம் என்பவைகளை யுண்டாக்கினார். இப்பிரம்மாண்டம் என்பது என்னவெனில் பதினான்கு உலகங்களை அடக்கி வைத்துக்கொண்டிருக்கும் ஒரு மூடிபோலுள்ள பெரிய பந்து. இப்படியாகவிருக்கும் பிரம்மாண்டங்கள் அநேகமுள்ளன. ஒவ்வொரு பிரம்மாண்டமும் பதினான்கு உலகுகளை யடங்கியுள்ளன. இப்பதினான்கு உலகங்களுக்கும் பெயர் உண்டு. இதில் பூலோகம் என்று ஒரு உலகுக்குப் பெயர். அவ்வுலகம் எது என்று நாம் இங்கு கூறவேண்டிய அவசியம் கிடையாது. இவ்வுலகுக்கு கர்ம பூமி என்றும் ஒரு பெயர் உண்டு. ஏனெனில் கர்மா என்பது இக்கர்ம பூமியில் மாத்திரம் தானுண்டு.

இவைகளையுண்டாக்கிய பிறகு பரமாத்மாவானவர் ஜீவன் என்பதை யுண்டு பண்ணினார்.

பரமாத்மாவானவர் பிரம்மாண்டத்தின் எல்லைகளுக்குள்ளடங்கியிருக்கும் தன் பாகத்திலிருந்து ஜீவாத்மாவை யுண்டுபண்ணினார். இஜ்ஜீவனின் உருவத்தை நாம் சொல்லமுடியாது. அதை



விட சிறிய பதார்த்தம் ஒன்றுமே கிடையாது. ஏனெனில் ஒரு எறும்புக்கும் ஜீவனிருக்கிறது. ஒரு யானைக்கும் ஜீவனிருக்கிறது. இது தவிர ஜலத்திலும் காற்றிலும் நமது கண்களுக்குத் தெரியக் கூடாதபடி அநேக பூச்சிகளிருக்கின்றனவாம். அப்பூச்சிகளுக்கும் ஜீவனிருக்கிறது. அதனால் இந்த ஜீவாத்மாவானது மிகவும் சிறியதாக விருக்கவேண்டுமென்று நமக்குத் தெரியவருகிறது.

இஜ்ஜீவன் தான் ஸர்வானந்தஸ்வரூபமாகிய ஸச்சிதானந்த ரூபம். அதுதான் பரமானந்தம் என்னும் பரம்ஜோதி ரூபம். நிர்குணமாகிய நித்யபதார்த்தம் அதுதான். அதன் அநேகவிதமான தோற்றங்கள்தான் இவ்வுலகம், அதன் அநேக காட்சிகள் முதலியவை அது தான் நித்யதத்வஜோதி ரூபமான ஒரேவஸ்து. அது தான் ஆனந்தமயமான ரூபம்.

இஜ்ஜீவாத்மாவிற்கு புண்ணியம் பாபம், கர்மம், அகர்மம். என்பதே கிடையாது. ஏனெனில் ஜீவனைத்தவிர வேறு ஒரு வஸ்துவும் உண்மையாக வில்லை யல்லவா. அப்படி நித்யமாகவும், நிர்குணமாகவும் இருக்கும் ஒருபதார்த்தத்திற்குத்தான் ஜீவாத்மா என்று பெயர்.

இது தவிர நித்யபதார்த்தமாகவும், ஆதியந்த மில்லாமலும், சப்தரூபமாகவும் ஒரு பதார்த்தமிருக்கிறது. அதற்கு வேதம் என்று பெயர். அது, பரமாத்மாவைச்சார்ந்து எப்படி மாயை என்பதிருக்கிறதோ, அதுபோல் ஒரு வஸ்துவாகும். அவ்வேதம் என்பது சப்தரூபமாக விருக்கிறதே யொழிய ஒரு காகிதத்திலோ அல்லது ஒரு சுவடியிலோ எழுதிவைத்திருக்கவில்லை. ஏனெனில் காகிதம் சுவடியென்னும் பதார்த்தங்கள் மாயையின் காரியமல்லவா. ஆதலால் அவை அநித்யமான வஸ்துக்கள். ஆதலால் இப்படிச் சுவடி. முதலியவைகளில் எழுதிவைத்திருந்தால் வேதத்திற்கு அந்தம் என்பது உண்டாய் விடுமல்லவா? ஆதலால் நாம் இதிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டியதென்னவென்றால், வேதமென்பது ஆதியந்தமில்லாத சப்தரூபமான ஓர் வஸ்து என்பதே.

ஆகையால் நாம் இப்பொழுது தெரிந்துகொண்டதென்னவென்றால் வேதம் சாஸ்திரம் முதலியவை வேதத்திலிருந்துண்

14023
JL

டானது என்றும், நித்ய பதார்த்தங்கள் மூன்று என்றும் தானாகும். நித்ய பதார்த்தங்களாவன; மாயை, பரமாத்மா, வேதம்.

பரமாத்மாவானவர் தன் சிருஷ்டியில் முக்கியமாக கவனித்து ஏற்படுத்தின பதார்த்தங்களில் அவசியமானது ஜீவாத்மாவாகும். இந்த ஜீவாத்மாவானது ஒரு விதத்தில் ஆதியந்தமுள்ளதென்று யிருக்கிறது. மற்றொரு விதத்தில் பார்த்தால் அது ஆதியந்தமில்லாததாக ஆகிறது. நாம் இப்பொழுது, ஜீவாத்மாவானது எப்படி சிருஷ்டியாகிறதென்று கவனிப்போம். பிரம்மாண்டத்திற்குள்ளடங்கியிருக்கும் தன் பாகத்திலிருந்து ஜீவாத்மாவை உண்டு பண்ணினார். இதனால் நாம் அறிந்துகொள்ள வேண்டியதென்னவென்றால், ஜீவாத்மாவுக்கு ஆதி யென்பதுண்டு என்கிறதாகும். அது தவிர ஜீவாத்மாவானது மோக்ஷம் அடைகிறதல்லவா? அப்படி மோக்ஷம் அடைவதால் அதற்கு அந்தம் உண்டாகிறது. இதனால் ஜீவாத்மாவுக்கு ஆதியந்தமுண்டாய் விடுகிறது.

ஜீவாத்மாவானது பரமாத்மாவின் பாகமல்லவா? அது தவிர ஜீவாத்மா பரமாத்மாதானென்று சொன்னோமல்லவா? இது தவிர பரமாத்மாவானவர் ஆதியந்தமில்லாதவர் என்கிற ஒரு தத்வத்தால் ஜீவாத்மாவானது ஆதியந்தமில்லாததென்றாகிறது.

இப்படியாக ஜீவாத்மாவானது நித்யபதார்த்தமில்லையென்றும், நித்யபதார்த்தம் என்றும் கூறப்படுகிறது. இந்த ஜீவாத்மாவானது, மாயை என்பதால் சூழப்பட்டிருக்கிறது. இந்த மாயை என்பது இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்று நாம் முன்னமேயே சொன்னோமல்லவா? அப்படிப் பிரிக்கப்பட்டிருக்கிறதில் சூட்சுமப்பிரகிருதி என்னும் மாயையால் இந்த ஜீவன் சூழப்பட்டிருக்கிறது. அப்படி சூட்சுமப்பிரகிருதியானது இந்த ஜீவனைச் சூழ்வதனால், அஹம்காரம் என்பது உண்டாகிறது. அஹம்காரம் என்பது "சூட்சுமபிரகிருதி ஜீவனோடு சூழ்வதனால் உண்டாகிறது" என்னும் தத்வத்தைக்கொண்டு நாம் ஒரு பெரிய இரஹசியத்தைக் கண்டுபிடிக்கலாம். அதாவது, "அஹம்காரமில்லாவிடில் சூட்சுமபிரகிருதியென்பது கிடையாது," என்பதாகும்.



கடவுளின் சிருஷ்டியில் முக்கியமான சிலவற்றை நாம் கூறினோமல்லவா? அவைகளைத்தவிர மற்றும் சில முக்கியமான விஷயங்கள் கடவுளின் சிருஷ்டியிலிருக்கிறது. அஃதாவது, நாம் கடவுளின் சிருஷ்டியில் ஜீவன், வேதம், பிரம்மாண்டம் முதலியவைகளைச் சொன்னோமல்லவா? இப்பிரம்மாண்டம் என்னும் வஸ்து நாசத்தையடையக் கூடியது. அதனால் அது மாயையின் காரியம், இப்பிரம்மாண்டமானது நாசத்தையடையும்வழி ஒரு ஆச்சரியமான விதம். அஃது எப்பொழுது நாசமடையும் என்றால், மஹாப்பிரளயம், என்னும் ஜலப்பெருக்கு உண்டாகும்பொழுதுதான். ஒரு காலத்தில் ஸமுத்திர ஜலமானது திடீரென்று பெருகி, அலைகள் மிகவும் பெரிதாகக் கிளம்பும். அதேசமயத்தில் திடீரென வானம், மின்னலும் இடியும் கூடி, மழையைப் பொழியும்படியாகச் செய்யும். ஸமுத்திரமானது வரவர பெருகி, கொஞ்சம் கொஞ்சமாகப் பூமியை மூழ்கச்செய்யும். உடனே சூரியனிலிருந்து, நெருப்புக் கட்டிகள் விழும். அதே சமயத்தில் ஒரு பெரிய அலைகிளம்பி பதினான்கு உலகங்களையும் மூழ்கச்செய்யும். இப்படியாக எல்லா பிரம்மாண்டங்களும் இந்த மஹா பிரளயத்தில் மூழ்கிவிடும். இவ்விதமாக பிரம்மாண்டங்களெல்லாம் இந்த மஹாபிரளயத்தில் மூழ்கிவிடுகின்றன. இதுவும் கடவுளின் சிருஷ்டியல்லவா? கடவுள் இவைகளைத்தவிர மற்றும் அநேக சிருஷ்டிகள் செய்திருக்கிறார். தேவதா சிருஷ்டியென்ன, மந்திர சிருஷ்டியென்ன, இவைகளெல்லாவற்றையும் கடவுள் சிருஷ்டித்திருக்கிறார். அவைகளைப்பற்றி நாம் மறுசஞ்சிகையில் கூறுவோம்.

ஆத்மானந்த யோகீச்வரர்.

## அறிவிப்பு.

சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் ஒரு புதிய சந்தாதாரரை சேர்த்துக்கொடுக்குமாறு மிக கேட்டுக்கொள்ளுகிறோம். அவ்வாறு சேர்த்துக்கொடுக்கும் சந்தாதாரருக்கு 8-அணா விலையுள்ள புத்தகம் பரிசளிக்கப்படும்.

பத்திரிகாசிரியர்.

சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# அக்ஷராவதான விடுகதை வினாக்கவி.

நண்பான கவிஞரே யெனதரிய தேவனவ ளுமமோ
பத்தக் கரம்—நாடினதி லேழுநான் கைந்துபத்
தொருமுனிவ நவமெட்டு மூன்றுபத்தும்
பண்பிலவ னன்கினே டிருமூன்று சேரவே பரிதியா
மேழு மாறும்—பகருமான் மதமாகு மொன்றுநான்
கீரைந்து பரமனுஞ் சத்த மத்தோ
டெண்பாவு மிருமூன்று மைந்துமீ ரைந்துமே யேனுதி
யாகு மொன்றும்—இருநான்கு மொருபத்து
மொருநான்கு முகனு மிரண்டுநான் கொருபத்துமே
விண்பரவு விசயனு மொன்பதோ டிருமூன்று மேவுபாட்
டொன்றுறமே—விபுதருக் குணவாகு மிவையெலாந்
தேர்ந்துவிடை விடவரும் பரம னருளே

மு. தண்டாயுதபாணிக்காடவராயர்,
தமிழ்ப்பண்டிதர்,
போர்டு ஐஸ்கூல் குற்றாலம்.

# இந்து மதத்தின் பெருமை.

உலகத்து நடைபெறும் மதங்களிற் சிறந்தவை ஐந்து: அவை இந்துமதம், ஜாரதுஷ்டிரமதம், புத்தமதம், கிறிஸ்தவமதம், மகம்மதியமதம் என்பனவாம். ஏனைய சில மதங்கள் அறிஞராற் கணிக்கப்படுவன வல்லவாம். இவற்றுள் சங்கியையாற் பெருத்தது கிறிஸ்தவ மதம். அளவிற் சிறியதாயினும் வயதிலும் ஞானநுபாவத்திலும் பெரியது இந்துமதம். இம்மதம் ஏனைய மதங்களைப்போல நாட்டியவர் பேராலமையாது, சநாதன தர்மமாக வமைந்திருப்பதே இதன் முக்கிய பெருமை. இதர மதங்கள் முக்கியமாக ஒவ்வொரு கொள்கையையே பற்றிநிற்கும். புண்ய பாபப் போராட்டத்தையே விளக்குவது ஜாரதுஷ்டிரமதம். அன்பையும் அஹிம்ஸையையுமே முக்கியமாகக்கொண்டது புத்த மதம். அன்பு ஒன்றையே பற்றுக்கோடாகக் கொண்டது கிறிஸ்தவ மதம். பக்தி வைராக்கியத்தையே சிறப்பிப்பது மகம்மதிய



மதம். ஆனால் இந்து மதமோ கிரியையைச் சிறப்பிக்கும் வைதிகமும், அன்பு வைராக்கியத்தை சிறப்பிக்கும் சைவமும், பக்திப் பிரபக்திகளைச் சிறப்பிக்கும் வைணவமும், அஹிம்ஸையைச் சிறப்பிக்கும் ஜைநமும் ஞானத்தைச் சிறப்பிக்கும் வேதாந்தமும் ஆகிய பல உட்பிரிவினைகளை யுடையதாய்ப் பிறமதங்கள் தனித்தனியே சிறப்பித்து காட்டும் ஒழுக்கங்களை முற்றிலும் தன்னிடத்துக் கொண்டதாய், மத ஸ்தாபகர்களைத் தெய்வமேயென மயங்கி வழிபடச்செய்யும் சிறுமையற்றதாய், உலகமும் அதனிடத்துள்ள தாவர சங்கமங்களுமெல்லாம் மனிதனுடைய சௌகரியத்துக்கே ஏற்பட்டவையென்னும் உலகாயத மதத்தைத் தழுவாததாய், ஒருவராலும் ஆட்சேபிக்கமுடியாத உத்தமக் கொள்கைகளையும் உயர்ந்த (ideals) கோட்பாடுகளையு முடையதாய்ப், பக்குவர்களுக்குத் தக்கவாறு கொள்கைகளை யெடுத்துப் புகட்டவல்லதாய், மனம் வாக்குக்கெட்டாத ஒரே பரம்பொருளின் ஸகுண நிர்க்குணப் பெருமைகளைக் காதலாமலகமாக விளக்குவதாய் யுள்ளது. நூதன வறிவைப்பெற்ற சிறூர் சொற்பம் கர்வங்கொள்ளினும் பிதாவினது அநுபவ முதிர்ச்சி தம்மால் இகழப்படாது நிற்பதை அச்சிறூர் காலாந்தரத்தில் உணர்வதுபோல, நவீனமாகத் தலைக்கிளம்பின பல மதங்களும் தன்னை இகழ்ச்சியாகப் புறக்கணிக்கப் பார்க்கினும், காலாந்தரத்தில் அந்நவீன மதங்களுக்குத் தன்னநுபவத்தை யுணர்த்தி, யவற்றிற்குப் பக்குவம் வரும்போது அவற்றையும் தனக்குள் கவளீகரஞ் செய்துகொள்ளத்தக்க பேராற்றல் வாய்ந்தது. ஒரு காலத்து சங்கரர் தமது காலத்திருந்த மதங்களைப் பாகுபடுத்து ஷண்மதங்களை ஸ்தாபித்து மற்றவற்றை விலக்கினரென்பர்.

தற்கால நிலைக்கும் உலக விரிவுக்கும் ஏற்றபடியுள்ள மேற்சொன்ன பன்மதங்களையும் பரிசீலிக்கும் பெரியார், தத்துவ மதமாகிய வேதாந்தமென்ன, அருள் மதமாகிய சித்தாந்தமென்ன ஆகிய இவ்விருவகைக்குள்ளேயே இவ்வெல்லா மதங்களும் அடங்குமாதலின், சத்புத்திர மார்க்கத்தையும் தாஸமார்க்கத்தையும் சிறப்பித்துக்கூறும் அகச்சமயங்களாகிய சைவவைஷ்ணவங்களைப்போல அக்கொள்கைகளே வாய்ந்த பிறச்சமயங்களாகிய கிறிஸ்தவ மகம்மதிய மதங்களும் அருள்மதமென்

னும் பிரிவுக்கு ளடங்கத்தக்கவையே யென்றும், பாஷாபேதத்தினாலும் உபாசனாமூர்த்தி பேதத்தினாலும் அவற்றையொதுக்கி வைப்பது சரிதல்லவென்றும், இவ்வருண் மதங்களெல்லாம் ஸாலோக, ஸாமீப, ஸாரூப பதவிகளை மட்டும் தாவல்ல வுருவம், அருவுருவம், என்னும் கடவுளது இருநிலையையுமே பிரதிபாதிப்பதாதலின் கடவுளது அருவநிலையைப் பிரதிபாதித்து ஸாயுஜ்ய நிலையை யுணர்த்தும் வேதாந்தத்துக்குச் சமானமாகா தென்றும் இவ்வேதாந்த மதமே ஆணவமொழிந்த நிலையாகிய அத்வைத நிலையை யுணர்த்துவதென்றும் கூறுவாராகலின், இவ்வகைய மனோநிலையை யூட்டி உலகமுழுவதிலுமுள்ள மதங்களிடத்து ஸமரஸ பாவத்தோடு பழகச்செய்யும் ஏற்றம் நம் இந்துமதம்ஒன்றுக்கே யமைந்ததென்க. ஈண்டு இந்துமதம் என்றது துவைதம், விசிஷ்டாத்துவைதம், அத்துவைதம் என்னும் மும்மதங்களையும் தன்னுட்கொண்ட சமஷ்டி ரூபத்தையே யென்றுணர்க. இந்தநிலை இம்முச்சாகைகளது போராட்ட மொழிந்த நிலையாம். இல்லையேல் இச்சாகைகள் வேதம் முதனூலெனும் கொள்கையை யுரைப்பது தவறாகும் என்க.

எம்மதத்திலும் தத்துவங்களை யுணர்ந்து பிறவிப்பயனையடைவதை விட்டுக் கீழ்ப்படியுள்ளோரால் பாராட்டப்படும் கிரியாபாகங்கள் ஒருபுறமிருக்கத் தத்துவ பாகங்களைக் கவனிக்குமிடத்துக் கிறிஸ்தவம் துவைதமென்பது யாவர்க்கும் தெள்ளிதின் விளங்கும். உலகத்துப் பாவிகள் தாமென்றுணர்ந்து பத்துக் கற்பனைகளையும் அநுஷ்டித்து இரட்சகரது பற்றுக்கோட்டைப் பெற்றுச் சித்தி பெற்ற இக்காயம் கடவுளாகிய பிதாவினது சந்நிதானத்து அநுக்கிரஹம்பெற்ற நித்திய சூரிகளான சம்மனசுகளாக விளங்குவதில்லையேல் உலகத்து ஒரு ஆன்மா செய்யும் தபசின் பிரயோஜனந்தான் யாதென்னும் ஆணவமலம் கதித்து நிற்கும் மதம் கிறிஸ்தவ மதமாகும். இருளான பாதையினின்றும் விலகி ஒளியான கடவுள் நெறியைப்பற்றிச் சாந்தி என்ற இஸ்லாத்தையடைந்தும் இறந்த பிறகு புண்ய பாபத்துக்குத் தக்கவாறு ஒளியுடலையோ இருளுடலையோ வடைந்து ஆயத்தீர்ப்பு நாள் வரையிற்காத்திருந்து நித்திய மோட்சத்தையோ நித்திய நரகத்தையோ ஆன்மா அடையும்



மென்று கிறிஸ்தவம்போன்ற மற்றொருவகைத் துவைத மதக் கொள்கையைப் பற்றினது மகம்மதிய மதம். இவற்றை ஸாங்கிய மதத்தின் உட்பிரிவாகக்கொள்வதே சரி இவ்விரண்டு மதங்களும் ஒரு பிறப்புக்குமேல் ஆத்மாவுக்கில்லையென்ற சித்தமதத்தை யநுசரிப்பவை. இவற்றை இந்து மதத்துக் குட்படுத்தலாகாதோ வெனின், இம்மதங்கள் பாரதவருஷத்திற்கு வெளிப்பட்ட நாடுகளிலிருக்கும் புண்ணிய ஸ்தலங்களைத் தமக்கு முக்கியமாகக் கொண்டிருக்கும் காரணத்தாய் இந்துக்கள் அவற்றைத் தம்முட் சேர்த்துக்கொள்ள ஒப்புக்கொள்ளுவதில்லை. ஒரு சிலர் ஆசாரக்குறைவு ஆகாரவேற்றுமையின்மை யிவற்றைக் காரணமாகக்கூறித் தள்ளிவிடப் பார்ப்பர். இன்னோர், மதக்கோளுக்கும் நடையுடை பாவனைகளுக்கும் சம்பந்தமில்லையென்னு முண்மையை யறியாதாராவர். இந்துக்களுக்குச் சமீபத்தில் மகம்மதிய கிறிஸ்தவ இந்தியர்களையும் தமது அபார கருணாசத்தியால் தமது மதத்தின் உட்பிரிவினராகச் சேர்த்துக்கொள்ளவேண்டிய காலம் வந்துவிட்டதென்றே சொல்லலாம். தற்காலம் பஞ்சாப்பில் குவாடியான் என்னுமிடத்திலுள்ள ஒரு மகம்மதிய வகுப்பினர் துருக்கி ஸுல்தானுக்கு நபிநாயக வம்சத்துவம் இல்லையென்று கோட்பாட்டைக் கொள்ளத் தலைப்பட்டிருப்பதாலும், மகம்மதியர்களே யல்ல இந்துக்களும் நடையுடைய பாவனைகளில் பேதம் ஒன்றும் தோன்றாதபடி நடக்க முயல்வதே நாட்டுக்கழகு வென மதிக்கத் தலைபட்டு ஒரு மதஸ்தன் மற்றொரு மதஸ்தனைப் பேதமுணராதபடி யொழுக முயன்றுவருவதாலும், இந்துமதமும் பாரத வருஷ எல்லைக்குள் அடங்கிய நாட்டைத் தந்நாடாகக்கொள்ளும் எந்த ஜாதியாரையும் தொன்று தொட்டுத் தனக்குள் சேர்த்துக்கொண்டு வந்திருந்தும் காலநிலையை யநுசரித்து இதர நாட்டவர்களையுந் தன் மதத்துக் குட்படுத்த வேண்டிய அவசியத்தை யடைந்திருப்பதாலும், காலத்துக்குத் தக்கபடியும் தனது சூணிலைக்குத் தக்கபடியும் தன்னிடத்துள்ள மதாசாரவான்களது திருஷ்டி கோசரத்தைமாற்றி இதரர்களைத் தங்களுக்குள்ளாக்கும் ஆற்றலை அது நாளைக்கும் படைத்திருப்பதாலும், காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்க வண்ணம் புதுப்புது வருணாச்சிரமங்களை யேற்படுத்திக் கொள்ளும் தகுதி

புணர்ச்சி யதனிடத்துப் பொதிந்து கிடைப்பதைக் காட்டுமாறு மேனுடுகளிலுள்ள பலரையும் தன் மதத்துக் குட்படுத்தி வரும் அநுபவத்தாலும், கடைசியாக, இதரமதக் கொள்கைளைப்போலக் கலைஞானவிரிவினுல் மதக்கோள் தன்னமேனும் மாறுபாடடைய முடியாத ஸ்திதி ஸ்தாபகம் அதற்குண்மையாலும், இனிவரும் சில நூற்றுண்டுகளுக்குள் இந்து மதமே முக்கியமான மதமாக உலக முழுதும் எண்ணப்பெறுமென்பது திண்ணம். ஆனுல் அப்படி எண்ணப்பெறும் இந்துமதம் தற்காலம் அதனையாசரிப்பாரது குறுகிய உணர்ச்சிகளைப்பற்றி நில்லாது. என்? இவ்விந்து மதத்துக்கு ஆதாரமான வேதங்கள் பலரும் அறியுமாறு வெளிப்படின் அவற்றைப் படிப்பதனுல் வரும் போறிவுமனிதனது மனக்கோணல்களையெல்லாம் நிமிர்த்தி இடைக்காலத்துச் சனசமூகத்துக்குள் நுழைந்திருந்த ஜாதிப்பாகுபாடுகளை யறவொழித்து, மனிதர் யாவரும் பிறப்பிற் சமானரேயென்ற பாவனையாகிய பெருந்தனத்தை யவர்க்களித்துப், புராதன நாகரீகத்தைப் புதுக்கால வுணர்ச்சிக்குத் தக்கபடி மாற்றிவைக்கும் என்பதில் யாதொரு சந்தேகமு மில்லை. இக்காரணத்தை முன்னிட்டே இவ்வேதங்களைப் பலபாஷைகளிலும் மொழிபெயர்த்து அவற்றின் பயனை நுகருமாறு செய்வது ஆஸ்திகர்களாகிய இந்துக்கள் ஒவ்வொருவருக்கும் முக்கிய கடனென்று நாம் அடிக்கடி வாய்ப்பறையாகவும் நாக்கடிப்பாகவும் கொண்டு சாற்றுவது. இக்காரணத்துக்காகவே இவ்வேதங்களை முதலிற் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கியது. இதர பாஷைகளிலும் இவற்றைப்பலரும் மொழிபெயர்க்க முன்வருமாறு தூண்டவேண்டுமென்று நாம் சதா கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டிருப்பதற்குக் காரணமு மிது.

வேதபீரோ,
31-32 பார்வீதி, ரங்கோன். } சிவத்தியாநாநந்த மஹர்ஷி.

குறிப்பு :—இப்பெரியாரால் மொழிபெயர்க்கப்பட்ட ரிக்வேதம் யஜுர் வேதம் பயிண்டு புத்தகங்களாக இருப்பவை நமது ஆபீசில் விலைக்குக் கிடைக்கும்.

பத்திரிகாசிரியர்.



# "பைந்தமிழ்" பஞ்சாங்கம்

(All rights Reserved.)

உருத்ரோத்காரிவூ வைகாசிமூ 1923வூ மே-ஜூன்மூ இங்கிலீஷ் 1923, கலியுகவூ 5024, சாலிவாகனவூ 1845, கோல்லம் 1098, விக்ரமசகம் 1980, ஹிஜரி 1341, பசலி 1332, பாண்டவரப்தம் 5025, பிரபாவதி 57.

| மே மாதம். | வைகாசி மாதம். | கிழமைகள். | திதி. | | நக்ஷத்திரம். | | யோகம். | | புண்யகாலம் விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | திங் | சது | 51-45 | அசு | 26-21 | ஆயு | 10-44 | [விருஷபாவி 23-20. நிலம்வாங்கிப் பயிரிட, மாடுவாங்க, |
| 15 | 2 | செவ் | ● | 56-13 | பர | 32-27 | சௌ | 12-9 | அமாவாசை, குளம், கிணறுவெட்ட. |
| 16 | 3 | புத | பிர | 59-54 | கார் | 37-56 | சோ | 13-5 | கணக்கு அப்யசிக்க, கிழங்குநட, [தசஹரா ஆரம்பம். |
| 17 | 4 | வியா | துதி | 60-0 | ரோ | 42-28 | அதி | 13-20 | ஆபரணம்பூண, தூண்தோப்புநட. |
| 18 | 5 | வெள் | துதி | 2-28 | மிரு | 45-56 | சுக | 12-44 | மழை 10-க்குள், பொன்னேரிகட்ட. |
| 19 | 6 | சனி | திரு | 3-54 | திரு | 48-9 | திரு | 11-15 | வியாபாரஞ்செய்ய, வாசக்கால்நட. |
| 20 | 7 | ஞாயி | சது | 4-2 | புன | 49-5 | சூல | 8-3 | பூண்டி, தஞ்சைவளிஷ்டேச்வரர், மாயவரம் [சுப்ரமண்யர் உத்சவம். |
| 21 | 8 | திங் | பஞ் | 2-53 | பூச | 48-50 | கண் | 5-11 | உத்தியோகம்செய்ய, சர்வமுகூர்த்தம், [சிம்ம, ராகுப்ரீதி. |
| 22 | 9 | செவ் | சஷ் | 0-35 | ஆயி | 47-31 | விரு | 0-40 | திருமாகாளம் ஸோமயாஜி யாகோத்சவம். |
| | | | சப் | 56-37 | | | துரு | 54-44 | ஸோமாசி ராமநாயனர், மிதுனயனம் 14-9 |
| 23 | 10 | புத | அஷ் | 52-50 | மக | 45-14 | வியா | 49-23 | மழை 7-க்குள், நிட்சேபம்வைக்க. |
| 24 | 11 | வியா | நவ | 47-47 | பூர | 42-33 | அரி | 42-42 | சிவாலயங்களில் 5-ம் திருவிழா |
| 25 | 12 | வெள் | தச | 42-14 | உத் | 38-42 | வச் | 35-36 | சர்வமுகூர்த்தம் கடகம், தசஹரா பூர்த்தி. |
| 26 | 13 | சனி | ஏகா | 36-19 | அஸ் | 34-46 | சித் | 28-11 | சர்வஏகாதசி, யாத்திரைசெய்ய. |
| 27 | 14 | ஞாயி | துவா | 30-15 | சித் | 30-41 | வ்ய | 20-36 | காஞ்சி வரதராஜர் உத்சவம். |

| மே மாதம். | வைகாசி மாதம். | கிழமை. | திதி. | | நக்ஷத்திரம். | | யோகம். | | புண்யகாலம் விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28 | 15 | திங் | திர | 24-18 | சுவா | 26-37 | வரி | 13-1 | அக்னி நக்ஷத்திர நிவர்த்தி. |
| 29 | 16 | செவ் | சது | 18-26 | விசா | 22-52 | பரீ | 5-35 | வாகனமேற. |
| | | | | | | | சிவ | 52-52 | |
| 30 | 17 | புத | ○பௌ | 13-1 | அநு | 18-3 | சித் | 51-45 | கரிநாள். |
| 31 | 18 | வியா | பிர | 8-9 | கேட் | 16-41 | சா | 45-44 | புதுவுலக்கை [புழங்க. |
| ஜூன் ௴ 1 | 19 | வெள் | துதி | 4-8 | மூல | 14-14 | சுப | 40-23 | |
| 2 | 20 | சனி | திரு | 0-53 | பூரா | 13-49 | சுப் | 35-53 | |
| | | | சது | 57-69 | | | | | |
| 3 | 21 | ஞாயி | பஞ் | 58-5 | உத் | 13-50 | பிர | 32-22 | உபாயனம்செய்ய |
| 4 | 22 | திங் | சஷ் | 58-30 | திரு | 15-8 | மா | 29-46 | |
| 5 | 23 | செவ் | சப் | 60-0 | அவி | 17-42 | வை | 28-13 | |
| 6 | 24 | புத | சப் | 0-25 | சத | 21-29 | விஷ் | 27-37 | காளாஷ்டமி. |
| 7 | 25 | வியா | அஷ் | 3-16 | பூரட் | 26-20 | பிரீ | 27-53 | |
| 8 | 26 | வெள் | நவ | 7-12 | உத்ர | 32-3 | ஆயு | 28-53 | |
| 9 | 27 | சனி | தச | 11-43 | ரேவ | 38-17 | சௌ | 30-12 | வாத மேசசங்சாகம் 9-நாள் வரை. |
| 10 | 28 | ஞாயி | ஏகா | 16-37 | அசு | 44-45 | சோ | 31-48 | சர்வ ஏகாதசி. |
| 11 | 29 | திங் | துவா | 21-29 | பர | 51-1 | அதி | 33-17 | அகஸ்தியாஸ்தமனம். |
| 12 | 30 | செவ் | திர | 25-51 | கார் | 56-39 | சுக | 34-22 | கிருத்திகை. |
| 13 | 31 | புத | சது | 29-27 | ரோ | 60-0 | திரு | 34-47 | நவக்ரஹ சாந்திசெய்ய. |
| 14 | 32 | வியா | ● | 32-25 | ரோ | 1-25 | சூல | 34-7 | அமாவாசை, சனிவக்ரநிவர்த்தி. |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | ரவி செ புத | |
| கே | 4—மேஷ-சுக் 8—மிதுன-செ 11—மேஷ-பு 24—ரிஷ-ரிஷ 28—ரிஷ-ச-பு | | |
| | | | ராகு |
| | | குரு | சனி |

PRINTED BY SOLDEN AND CO., FOR K. JAGADISAN, B.A. EDITOR AND PUBLISHER, MADRAS.


# சுதந்திரன்.

பிரதி பானுவாரந்தோறும்

வெளிவரும் ஓர் தமிழ் பத்திரிகை.

சென்ற 7வருஷ காலமாய் நம் நாட்டு முன்னேற்றத்திற்கு அடிப்படியான விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலிய செல்வ விருத்திக்கான விஷயங்களும், மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் அவசியமான சுகாதாரம், ரோக பரிகாரம், மருவிலக்கு முதலிய வியாசங்களுடன் வெளிவந்துகொண்டிருந்த "வர்த்தக மித்திரன்" தத்கால போக்கை யனுசரித்து 23-4-22 முதல் "சுதந்திரன்" என்னும் பெயருடன், இராஜீய விஷயங்கள், மகாத்மா அவர்களின் உபதேசம், இந்தியர் முன்னேற்ற மார்க்க விவரங்கள் முதலிய விஷயங்களுடன் வெளிவருகின்றது. சுயராஜ்ய மடைய விரும்புவோர் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையை வரவழைத்துப் படித்து சகோதர, சகோதரி யாவரும் சுயராஜ்ய மடைந்து சுகஜீவிகளாக வேண்டும்.

வருஷ சந்தா இந்தியாவிற்கு ரூ. 6—2—0

சுதந்திரன் ஆபீஸ்,
தஞ்சாவூர்.

உனக்கு வேண்டியதும், நீ பார்க்க வேண்டுமென்று அநேக நாள் தேடிய சாஸ்திரம் இதுவே.

# சரீர மர்ம சாஸ்திரம்.

தமிழ் பாஷையில் இவ்வளவு பூர்ணமான இரகசிய சாஸ்திரம் இதுவரையில் எவராலும் பகிரங்கமாய் வெளியிடவில்லை. பலவருஷங்கள் பாடுபட்டு, பலகிரந்தங்களை ஆராய்ந்துணர்ந்து வெகு பொருட் செலவில் தயார் செய்யப்பட்டுள்ளது. இதில் சரீர அமைப்பு சுகாதார சாஸ்திரம், மருத்துவ சாஸ்திரம், சிசுஉற்பத்தி, சிசு பரிபாலனம், தாது நஷ்டம், ஸ்திரீ, புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதைபோக்க தக்க சிகிச்சைகளும், விவாகமானவர்களுக்கும், இனிமேல் விவாகம் செய்துகொள்ளும் ஸ்திரீ புருஷர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய இல்லற இன்ப ரகசியங்களுடன் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில 50. படங்களுடன் அச்சிடப்பட்டது. விலை ரூபா 1—0—0 கொஞ்சம் காப்பிகளே அச்சிடுவதால் இது சீக்கிரம் செலவாய்விடும். பிறகுகிடைப்பதரிது. விலை ரூபாய் ஒன்றே உடனே எழுதுங்கள்.

மானேஜர் :—
மாணிக்க விலாசம்பிரெஸ்,
அருணாசல முதலி வீதி,
சவுகார் பேட்டை, மதராஸ்,

## IDEAL TEACHER.

## பேராசிரியன்

பள்ளிக்கூடங்களுக்கும், மற்றும் ஆசிரியர்களுக்கும், சிறுவர்களுக்கும் உபயோகமான மாதாந்தப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 1—8—0 மாதிரி காப்பி அணா 3.

பாலர் கதாமஞ்சரி 22 சிறிய கதைகள் (200 pages) ரூ .2.

N. VENKATARAYALU & SON
Muthialpet, MADRAS

## ஸமரசபோதினி.

இப்பெயர் புனைந்த வாரம் இருமுறை பத்திரிகை திங்கள் வியாழன் தோறும் தஞ்சையிலிருந்து தமிழில் வெளிவருகிறது. (தமிழ் ஜில்லாக்களில் சுதந்தரதாகத்தை எழுப்பிச் சீக்கிரம் பூரணசுய ஆட்சி பெறுவதற்கு நியாயமான கிளர்ச்சி செய்வதே இதன் முக்கிய நோக்கம். வகுப்பு, ஜாதி, மதம் முதலிய பேதங்களை நீக்கி ஜனஸமூகத்தை நிர்மாணிப்பது இதன் லக்ஷியமாகும்.) உள் நாடு வருஷ சந்தா ரூ. 7. அரை வருஷ சந்தா ரூ. 4. வெளி நாடு வருஷம் 1-க்கு ரூ. 9., அரைவருஷம் ரூ. 5. தேசம், வகுப்பு, முன்னேற்றத்தைக்கருதி எவ்விஷயமும் துணிவுடன் எழுதப்படும்.

மானேஜர்,
ஸமரஸ போதினி,
தஞ்சாவூர்.

## விநோத விகடன்.

வாரப்பதிப்பு: இதில் தன் பெயருக்கேற்ப விநோத விகடவியாசங்களும், உள்ளூர் வெளியூர் வர்த்தமானங்களும், தந்தி பந்திகளும், கோர்ட் வர்த்தமானங்களும் நீதி நல்லொழுக்கம் ஆசாரம் முதலிய விஷயங்களும் குலக்குறிப்புகளும் இன்னும் இதரவிஷயங்களும் வெளியாகின்றது.

இதன் வருட சந்தா உள்ளூருக்கு ரூ 4—0—0.

ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார், பத்திராதிபர்,
நெ. 33 நாசய்யர் வீதி,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை.

## தமிழகம்.

(வாரம் இருமுறைப் பதிப்பு.)

மலாய் நாட்டின் சிறந்த தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய்ப் பிரதி திங்கள் வியாழக்கிழமைகள் தோறும் வெளிவருகிறது. நம் தமிழ் நாட்டிலிருந்து பினாங், சிங்கப்பூர், மலாக்கா முதலிய பிரதேசங்களை உட்படுத்திய தொடுவாய்ப் பகுதிகளிலும், ஐக்கியமலாய் நாடுகளிலும், சைகோன், சுமத்ரா, ஜாவா, போர்னியோ, பிலிப்பைன்ஸ், பிஜி, முதலிய கீழ்தேசப் பகுதிகளிலும் குடியேறி வதியும் தமிழ் ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக் காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இஃது மலாய் நாடு, பிரஞ்சு கொச்சின் சீனா, நெதர்லாண்டு இண்டீஸ், போர்னியோ, இந்தியா பர்மா, இலங்கை நேட்டால் முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது. கீழ்தேசப் பகுதிகளுக்கு இதன் வருட சந்தா, வெள்ளி 10,00 ஆறு மாதங்களுக்கு வெள்ளி 5. 5. 0. இந்தியா, பர்மா, இலங்கை, நேட்டால், கென்யா முதலிய மேல் நாடுகளுக்கு வருட சந்தா ரூபாய் 15. ஆறுமாதங்களுக்கு ரூபாய் 8. நீடித்த விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர் "தமிழகம்" ஆபீஸ்,
நெம்பர் 190, பத்து ரோட்டு,
கோலாலம்பூர்,
ஐக்கிய மலாய் நாடுகள்.

## நியாயாபிமானி.

பிரதி புதவாரந்தோறும் பிரஞ்சிந்தியாவில் வெளியாகும் ஓர் தமிழ்வாரப்பத்திரிகை இதன் வருஷ சந்தா ரூ 4-0-0 இதை ஒவ்வொரு தமிழரும் வாங்கி பார்த்துப் பயன் பெறுவார்களாக.

நியாயாபிமானி ஆபீஸ்.
காரைக்கால்.

## தேசஊழியன் திருச்சி.

### தேசிய மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

இதில் ராஜீய விஷயங்கள், கைத்தொழில், விவசாயம், தேசாபிமானிகளின் சரித்திரம், இனிய நாவல்கள், மற்றும் பல அரிய விஷயங்கள் பிரபல நிபுணர்களால் எழுதப்படும்.

தேசசேவையைப் பிரதானமாகக் கைக்கொண்டிருக்கும் இப்பத்திரிகையை ஆதரிப்பது உங்கள் கடமையன்றோ?

வருஷசந்தா :—உள்நாடு ரூ. 3, வெளிநாடு ரூ. 4.

# வியாபாரிகளுக்கும் மொத்தமாய் வாங்குபவர்களுக்கும் மட்டும்.

1. இஞ்சின்மேக் உயர்ந்த இங்கி மாத்திரைகள், கல்கத்தா புளூபிளாக். 1 குரோஸ் 0-6-0; சிவப்பு 0-10-0; பச்சை ... 0 6 0
2. ரப்பர் ஸ்டாம்பு இங்கி, வெகு உயர்ந்தவகை. டஜன் 1-க்கு ... 2 0 0
3. துணியில் குறிபோடுவதற்கான உயர்ந்த இங்கி, டஜன் 1-க்கு ... 1 4 0
4. பௌண்டென் பேனுக்களுக்கு உபயோகமான உயர்ந்த இங்கி, புளூபிளாக் 4 அவுன்ஸ் பெரிய புட்டி டஜன் 1-க்கு ... 3 8 0
5. டை 2 அவுன்ஸ் ½ புட்டி டஜன் 1-க்கு ... 2 0 0
6. 40, 60, 80, 100, 120, பென்ஸல் ரப்பர் துண்டுகள் அடங்கிய பெட்டி டஜன் பெட்டிகளுக்கு ...10 0 0
7. உயர்ந்த லெட்டர் பேபர் 4 கட்டுகள் அடங்கிய பெரிய பாக்கெட் (500) ... 2 4 0
8. உயர்ந்த கிளேஸ் போஸ்டுகார்டுகள் 1000 கொண்ட கட்டுக்கு ... 3 6 0
9. கொசுகு ஈக்கள் முதலியவைகள் மனிதர்களை தொந்திரவு செய்யாமல் ஒட்டிக்கொள்ளும்படி தயாரிக்கப்பட்ட ஏரெக்ஸன் 100 பெட்டிகள் அடங்கிய பெட்டி 1-க்கு ... 8 0 0

கே. ஜகதீசன் கம்பெனி,
திருவல்லிக்கேணி,
சென்னை

# நவீன தமிழ் நாவல்கள்.

குறிப்பு:—நமது "பைந்தமிழ்" சந்தாதாரர்களுக்கு அடியிற் கண்ட நாவல்களை ரூபா 1-க்கு அணா 2 வீதம் குறைத்துக்கொடுக்கப்படும்.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| கன்னியின் முத்தம் 4-பாகம் | 5 | 0 | திகம்பரசாமியார் ... | 3 | 0 |
| திக்கற்ற இரு குழந்தைகள் | 1 | 8 | பாலாமணி ... | 2 | 0 |
| தலையணை மந்திரோபதேசம். | 1 | 0 | வித்தியாஸாகரர் ... | 1 | 4 |
| தானவன் ... | 0 | 12 | கனகாம்புஜம் ... | 2 | 8 |
| மாண்டிகிருஸ்டோ ... | 3 | 0 | கனகாங்கி ... | 2 | 0 |
| வரத சுந்தரம் ... | 2 | 0 | லீலா ... | 1 | 14 |
| அம்பு ஜாக்ஷி ... | 2 | 0 | பத்மநாபன் ... | 0 | 14 |
| அயக்ஷா .. | 1 | 12 | லீலாவதி ... | 0 | 12 |
| லண்டன் திருடர் ... | 2 | 12 | இரகுநாதன் ... | 0 | 12 |
| குலசேகரன் ... | 1 | 4 | வித்யாநந்தர் ... | 1 | 4 |
| மின்சாரமாயவன் ... | 1 | 8 | வீரசேகரி ... | 1 | 12 |
| புஷ்பவனம் ... | 0 | 14 | வசீகரி ... | 1 | 12 |
| இந்திராணி ... | 1 | 4 | வசுமதி ... | 1 | 8 |
| வஸந்த மல்லிகா ... | 1 | 8 | மாணிக்கவல்லி ... | 1 | 0 |
| மதன கல்யாணம் 3-பாகம்... | 4 | 8 | நாகரத்னம் ... | 0 | 12 |
| தாமரை வதனி ... | 1 | 4 | தனபாக்யம் ... | 2 | 0 |
| காதலா? கருணையா? ... | 0 | 14 | ஸ்திரீரத்னம் ... | 1 | 4 |
| அங்கயற்கண்ணி ... | 1 | 12 | ரூபிணி ... | 1 | 0 |
| அதிசய பொக்கிஷம் ... | 1 | 8 | ஜடாவல்லவர் ... | 2 | 8 |
| ஷண்முக சுந்தரம் ... | 2 | 0 | கிருஷ்ணவிஜயம் ... | 1 | 4 |
| தனபாலன் ... | 2 | 0 | காசிவிசாரணை ... | 0 | 8 |
| சித்ரரேகை ... | 1 | 8 | ஞானம்பாள் ... | 0 | 12 |
| பத்மரேகை ... | 1 | 4 | மகமது அலி ... | 0 | 8 |
| ஆத்மநாதன் ... | 0 | 12 | சிவாஜி ... | 1 | 0 |
| மேனகா ... | 3 | 0 | | | |

மானேஜர்,
பைந்தமிழ் ஆபீசு,
திருவல்லிக்கேணி

# SWARAJ LIBRARY IN ENGLISH.

| | | | | |
|---|---|---|---|---|
| **Non-co-operation in other lands** by A. Fenner Brockway | ... | 1 | 0 | 0 |
| **India & its Government** by A. Fenner Brockway | ... | 0 | 8 | 0 |
| **Advance India** by Bernard Houghton | ... | 0 | 8 | 0 |
| **National Education** by Aravinda Ghose | ... | 1 | 0 | 0 |
| **Significance of Indian Nationalism** by Hilda H. Howsin | ... | 2 | 8 | 0 |
| **India's Challenge to Civilisation** by Hilda H. Howsin | ... | 2 | 8 | 0 |
| **Plunder of India's Wealth** by G. V. Krishna Rau | ... | 1 | 0 | 0 |
| **Meaning of Non-Co-operation** by C. F. Andrews | ... | 0 | 12 | 0 |
| **Karl Marx:—a Modern Rishi** by Har Dayal | ... | 0 | 12 | 0 |
| **Ethics of Destruction** by Rabindranath Tagore & others | ... | 0 | 12 | 0 |
| **The Slavery of our times** by Count Leo Tolstoi | ... | 0 | 12 | 0 |
| **The First Step** by Count Leo Tolstoi | ... | 0 | 12 | 0 |
| **Resurrection of the Congress** by D. N. Bannerjea | ... | 0 | 4 | 0 |
| **Indian Home Rule (or Hind Swaraj)** by Mahatma Gandhi | ... | 0 | 6 | 0 |

# TAMIL—தமிழ்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. மகாத்மா காந்தியின் இந்திய சுயராஜ்யம் | ... | 0 | 12 | 0 |
| 2. அலிசகோதரர் சரித்திரம் | ... | 0 | 8 | 0 |
| 3. காரச்சி விசாரணை | ... | 0 | 8 | 0 |

Subscribers to this Journal will get the above at a discount rate (less 2 as in the rupee).

**K. JAGADISAN & Co.,**
*Triplicane, Madras.*

144022